ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய ஹோஷியார்பூர் பயணம்
பக்கம் 3

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளுடன் நடந்து கொண்ட விதம் (தொடர்-3)
பக்கம் 8

இறை மன்னிப்பின் காட்சிகள் (தொடர்-3)
பக்கம் 14

இஸ்முஹு அஹ்மது என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் (தொடர்-3)
பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | February 2022 | Issue No. 3


Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





## வாக்களிக்கப்பட்ட மகன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) (1889-1965)



# திருக்குர்ஆன்

رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً ۚ إِنَّكَ أَنتَ الْوَهَّابُ ٩

எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களைக் கோணலாக்கா -திருப்பாயாக. மேலும் எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)



# ஹதீஸ்

شَهْرُ بْنُ حَوْشَبٍ، قَالَ قُلْتُ لِأُمِّ سَلَمَةَ يَا أُمَّ الْمُؤْمِنِينَ مَا كَانَ أَكْثَرُ دُعَاءِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا كَانَ عِنْدَكِ قَالَتْ كَانَ أَكْثَرُ دُعَائِهِ "يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ" قَالَتْ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ مَا لأَكْثَرِ دُعَائِكَ "يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ" قَالَ يَا أُمَّ سَلَمَةَ إِنَّهُ لَيْسَ آدَمِيٌّ إِلَّا وَقَلْبُهُ بَيْنَ أُصْبُعَيْنِ مِنْ أَصَابِعِ اللَّهِ فَمَنْ شَاءَ أَقَامَ وَمَنْ شَاءَ أَزَاغَ

ஹஸ்ரத் ஷஹ்ரு பின் ஹவ்ஷப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக வேண்டிய துஆ எது? என்று கேட்டேன்.

அதற்கு அன்னார் கூறினார்கள்: ''யா முகல்லிபல் குலூபி ஸப்பித் கல்பீ அலா தீனிக் - உள்ளங்களை புரட்டுபவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக'' என்ற துஆவை கூறினார்கள்.

பின்னர் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், இந்த துஆவை தாங்கள் ஏன் அதிகமாக வேண்டுகிறீர்கள்? என்று கேட்டதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மனித உள்ளத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்துள்ளான். அவனது இரண்டு விரல்களுக் -கிடையில் அது உள்ளது. அவன் விரும்பும் போது அவன் விரும்பிய பக்கம் அவனை திருப்பி விடுகிறான்.

(திர்மிதி கிதாபுத் தஃவத் ஹதீஸ் 3522)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய ஹோஷியார்பூர் பயணம்

A. நாஸிர் அஹ்மது

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக இறைவனால் நியமிக்கப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியும் ஆவார்கள். அன்னார் தோன்றிய 19 -ஆம் நூற்றாண்டு இஸ்லாத்தின் வீழ்ச்சியின் காலமாக இருந்தது. கிறித்தவ பாதிரிமார்கள் இஸ்லாத்திற்கெதிராக தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். ஏராளமான முஸ்லிம்கள் கிறித்தவர்களாக மாறிக் கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தின் மீது எல்லாப் பக்கங்களில் இருந்தும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அந்த காலகட்டத்தில் இறைவனின் கட்டளைப்படியே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா என்ற ஒப்பற்ற நூலை எழுதினார்கள். 1880 முதல் 1884 வரை இந்த நூலின் 4 பாகங்கள் வெளியிடப்பட்டன. அவற்றில் அன்னார் இஸ்லாத்தின் மகத்துவத்தை குறித்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் சிறப்பினைக் குறித்தும், திருக்குர்ஆனின் மேன்மையைக் குறித்தும் மறுக்கவியலாத ஆணித்தரமான ஆதாரங்களைக் கொண்டு விளக்கி இருந்தார்கள். மேலும் இஸ்லாத்தின் மகத்துவத்தை முழு உலகிலும் பரவச் செய்வதற்காக 40 நாட்கள் தனிமையில் இருந்து இறைவனிடம் அருளை வேண்டிப் பிரார்த்திப்ப -தற்காக முடிவு செய்தார்கள். அதற்காக அவர்கள் முதலில் சூஜான்பூர் என்ற ஊரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அல்லாஹ் தனது நாட்டத்தை அன்னாருக்கு இவ்வாறு அறிவித்தான்.


ایک معاملہ کی عقدہ کشائی ہوشیار پور میں ہو گی

“ஒரு விவகாரத்திற்கு ஹோஷியார்பூரில் தீர்வு காணப்படும்”.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 13 ஜனவரி 1886 -ல் தமது சஹாபி ஹஸ்ரத் முன்ஷி ருஸ்தம் அலி (ரலி) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

“நான் எந்த ஊரில் தனிமையை மேற்கொள்ள வேண்டும் என்று கண்ணியமிக்க இறைவன் எனக்கு அறிவித்து விட்டான். அது ஹோஷியார்பூர் ஆகும்.” (மக்தூபாத்தே அஹ்மத் பாகம் 2 பக்கம் 468)

இந்த இறையறிவிப்பைப் பெற்ற பிறகு அன்னார் ஹோஷியார்பூர் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். ஹோஷியார்பூரில் உள்ள ஒரு முக்கிய பிரமுகரான ஷேக் மெஹர் அலி சாஹிப் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் ஹோஷியார்பூரில் தான் தனிமையில் இருப்பதற்காக இரண்டு மாதங்களுக்காக முற்றத்துடன் கூடிய




வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹோஷியார்பூரில் 40 நாட்கள் தனிமையில் தங்கியிருந்த அறை

மாடி வீடு ஒன்றை ஏற்பாடு செய்யும்படி பணித்தார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி - 1, பக்கம் 275)

இந்த அருளுக்குரிய பயணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் (ரலி), ஹஸ்ரத் ஷேக் ஹாமித் அலி சாஹிப் (ரலி) மற்றும் ரஸுூல்பூரைச் சேர்ந்த ஃபதஹ் கான் சாஹிப் ஆகியோர் இருந்தனர். இவர்கள் 22 ஜனவரி 1886- ல் ஹோஷியார்பூர் வந்தடைந்தனர்.

ஹோஷியார்பூர் வந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்முடன் வந்த மூவருக்கும் பணிகளை நிர்ணயித்தார்கள். ஃபதஹ்கான் சாஹிபிற்கு கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்கும் பணி கொடுக்கப்பட்டது். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக உணவு தயார் செய்து தர வேண்டிய பொறுப்பு ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் (ரலி) அவர்களிடம் தரப்பட்டது. ஹஸ்ரத் ஷேக் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கவும், விருந்தினர்களைக் கவனிக்கவும் பணிக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 40 நாட்கள் அந்த வீட்டின் மாடியில் உள்ள அறையில் தங்கி இருந்தார்கள். 40 நாட்கள் தாம் தனிமையை மேற்கொள்ளும்போது தன்னை எவரும் சந்திக்க வரக்கூடாது என்றும், அதன் பின்னர் 20 நாட்கள் தாம் ஹோஷியார்பூரிலேயே இருக்கப்போவதாகவும் அப்போது தன்னை சந்திக்க வரலாமென்றும் தெளிவுபடுத்தி இருந்தார்கள். மேலும் அறையின் கதவு எப்பொழுதும் தாழிட்டே இருக்க வேண்டும் என்றும், எவரையாவது தாம் அழைத்தால் அவர் சுருக்கமாகவே பேச வேண்டும், அதிகமாகப் பேசக் கூடாது என்றும் தம்முடன் வந்தவர்களிடம் கூறியிருந்தார்கள். மேலும் தனக்குரிய உணவினை அறையில் வைத்து விட்டு சென்றுவிட வேண்டும் என்றும், தான் உணவு உண்டு முடிக்கும் வரை காத்திருக்கக் கூடாது என்றும், காலியான பாத்திரத்தை அடுத்த முறை வரும் பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருந்தார்கள். தொழுகைகளைப் பொறுத்த வரை தனது அறையில் தாமே தனியாக தொழுது கொள்வதாகவும் கூறியிருந்தார்கள். ஜுமுஆ தொழுகைக்காக ஒரு தோட்டத்தில் பயன்படுத்தாமல் விடப்பட்டிருந்த அருகிலிருந்த ஒரு பள்ளிவாசல் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு வந்து ஜுமுஆ தொழ வைப்பார்கள். உடன் வந்திருந்த மூவரும் அதில் கலந்து கொண்டார்கள். (சீரத்துல் மஹ்தி பக்கம் 63)

ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் (ரலி) அவர்கள் இந்த நாட்களைப் பற்றி கூறும்போது சில சமயங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னிடம் தமது ஆன்மீக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதாகவும் கூறுகிறார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: "நான் மாடியிலிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அறைக்கு உணவு எடுத்துக் கொண்டு செல்வேன். அதனை வைத்து விட்டு உடனே வந்து விடுவேன். ஒரு வார்த்தை கூட பேச மாட்டேன். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில சமயங்களில் என்னிடம் ஏதாவது கூறுவார்கள். ஒருமுறை அன்னார் என்னிடம் மியான் அப்துல்லாஹ்! இந்த நாட்களில் அல்லாஹ்வின் கருணை மற்றும் அருட்களின் வாசல்கள் திறந்தன. சில சமயங்களில்




ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தியாவின் முக்கிய தலைவர்களுடன் சந்திப்பு: இடப்புறம் சரோஜினி நாயுடு அவர்கள் மற்றும் வலப்புறம் புகழ்பெற்ற முஸ்லிம் தலைவர் கவாஜா ஹஸன் நிஜாமி மற்றும் சர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப்

இறைவன் என்னுடன் இரவின் கடைசிப் பகுதி வரைப் பேசிக் கொண்டிருக்கிறான். அந்த வார்த்தைகளை நான் தொகுக்க ஆரம்பித்தால் அவை பல பக்கங்களைக் கொண்டதாகிவிடும்" என்று கூறினார்கள். (சீரத்துல் மஹ்தி பக்கம் 64)

இந்த 40 நாட்களில் நடந்த மற்றுமொரு நிகழ்ச்சியை விளக்கியவாறு ஹஸ்ரத் அப்துல்லாஹ் சனோரி (ரலி) கூறுகிறார்கள். ஒருநாள் உணவு வைப்பதற்காக நான் மாடிக்கு சென்றபோது ஹுஸுூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த இறை அறிவிப்பைப் பெற்றேன் بُوْرِكَ مَنْ فِيْهَا وَمَنْ حَوْلَهَا இதில் இருப்பரும் இதனை சுற்றி இருப்பவர்களும் அருள் செய்யப்பட்டுள்ளார்கள். ஹுஸுூர் அவர்கள் இதனை விளக்கியவாறு مَنْ فِيْهَا இதில் இருப்பவர் என்பது என்னையும் مَنْ حَوْلَهَا இதனைச் சுற்றி இருப்பவர்கள் என்பது (என்னுடன் வந்திருக்கிற) உங்களையும் குறிக்கும் என்றும் கூறினார்கள்.

(சீரத்துல் மஹ்தி பக்கம் 65)

## ஓர் அருளுக்குரிய மகனின் நற்செய்தி!



பிரிவினைக்குப் பிறகு 1948 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் ஒரு குழு புகைப்படம்

இந்த நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஓர் அருளுக்குரிய மகனைக் குறித்த நற்செய்தி வழங்கப்பட்டது. அதில் அவர் மிகவும் புத்திக் கூர்மை கொண்டவராக இருப்பார், தனது மஸீஹிய்யத்தின் குணத்தினால் பலரை குணப்படுத்துவார், பணிவு மிக்கவராகவும், மார்க்க உலக அறிவுகளால் நிரப்பப்பட்டவராகவும் இருப்பார், இறைவனின் நிழல் அவர் மீது இருக்கும் என்றெல்லாம் கூறப்பட்டிருந்தது. இந்த முன்னறிவிப்பின் அசல் வாசகங்கள் கீழே தரப்படுகிறது.

“கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான். நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு எனது ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஷியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது தீய சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகிறேனோ அதனை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூய தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்பா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் போன்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் வெளிப்படையான திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்து தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார்.

அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு புனித ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அசுத்தத்திலிருந்தும் தூய்மை அடைந்தவர் ஆவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார். அவர் உலகத்திற்கு வருவார். தனது மஸீஹிய - குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால் இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திகூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். திங்கட்கிழமை; அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடமிருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்தது போன்று அது

இருக்கும். அவரது வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வகான அம்ரன் மக்ஸிய்யா - இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.” (மஜ்முஆ இஸ்திஹாரத் பாகம் 1, ஜுமுஆ குத்பா 21.02.2014)

இந்த முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக (முஸ்லிஹ் மவ்வூது) ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 1889 -ஆம் ஆண்டு ஜனவரி 12 -ஆம் நாள் பிறந்தார்கள்.

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் 52 அடையாளங்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1944 -ல் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி நான்தான் என்று அறிவித்தார்கள். அந்த வருடத்தின் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தும் போது, முன்னறிவிப்பின் தன்மை குறித்து 52 அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன என்று அவற்றை எடுத்துரைத்தார்கள். அவை பின்வருமாறு:

1) அவர் இறைவனின் வல்லமையின் அடையாளமாக இருப்பார்.
2) அவர் கருணையின் அடையாளமாக இருப்பார்.
3) இறை நெருக்கத்தின் அடையாளமாக இருப்பார்.
4) அவர் அருளின் அடையாளமாக இருப்பார்.
5) அவர் இறைவனின் பேரருளின் அடையாளமாக இருப்பார்.
6) அவர் ஆற்றல்மிக்கவராக இருப்பார்.
7) அவர் மகிமைக்குரியவராக இருப்பார்.
8) அவர் செல்வம் நிறைந்தவராக இருப்பார்.
9) அவர் மஸீஹின் ந.ஃப்ஸைக் கொண்டவராக இருப்பார்.
10) உண்மையான ஆன்மாவின் பரக்கத்தால் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார்.
11) அவர் இறைவனின் வார்த்தையாக இருப்பார்.
12) இறைவனின் கருணையும் தன்மான உணர்வும் அவரை தனது மகிமைமிக்க வார்த்தைகளுடன் அனுப்பும்.
13) அவர் மிகுந்த புத்திக்கூர்மை உள்ளவராக இருப்பார்.
14) அவர் மிகுந்த புரியும் திறன் கொண்டவராக இருப்பார்.
15) அவர் மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பார்.
16) அவர் வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார்.
17) அவர் அந்தரங்க அறிவுகளால் நிரப்பப்படுவார்.
18) அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார்.
19) திங்கட்கிழமையுடன் அவருக்கு குறிப்பான தொடர்பு இருக்கும்.
20) அவர் பாசமிக்க புதல்வராக இருப்பார்.
21) கண்ணியத்திற்குரியவராகவும், மேன்மைக்குரியவராகவும் இருப்பார்.
22) அவர் ஆரம்பத்தை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
23) அவர் இறுதியை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
24) அவர் உண்மையை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
25) அவர் உயர்வை வெளிப்படுத்தக் கூடியவராக இருப்பார்.
26) அல்லாஹ் வானத்திலிருந்து இறங்கியது போல் என்ற கூற்றுக்குப் பொருத்தமானவராக அவர் இருப்பார்.
27) அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாக இருக்கும்.
28) அவரது வருகை இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும்.
29) அவர் ஒளியாக இருப்பார்.
30) அவர் இறை திருப்தியின் நறுமணத்தால் நறுமணம் கமழும் படி செய்யப்பட்டிருப்பார்.
31) இறைவன் தனது ஆவியை அவர் மீது இடுவான்.
32) இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும்.
33) அவர் மிக விரைவாக வளர்வார்.
34) அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார்.
35) அவர் பூமியின் எல்லைகள் வரை பிரசித்திப் பெற்று விடுவார்.
36) சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும்.
37) அவர் தனது இறுதி நோக்கத்தை அடைந்து விண்ணின் பக்கம் உயர்த்தப்படுவார்.
38) அவர் காலதாமதமாக வருபவராக இருப்பார்.
39) அவர் தொலைவிலிருந்து வருபவராக இருப்பார்.
40) தூதர்களின் பெருமையாக அவர் திகழ்வார்.
41) அவரது வெளிப்படையான அருள்கள் பூமி முழுவதும் பரவி விடும்.
42) அவரது அந்தரங்கமான அருள்கள் பூமி முழுவதும் பரவிவிடும்.
43) யூஸு.ஃபைப் போன்று அவரது மூத்த சகோதரர்கள் அவர்களை எதிர்ப்பார்கள்.
44) அவர் பஷீருத் தௌலாவாக, ஆட்சி தொடர்பான நற்செய்திகளைக் கூறுபவராக இருப்பார்.
45) அவர் திருமணங்கள் முடிப்பவராக இருப்பார்.
46) அவர் ஆலமே கபாப் ஆக இருப்பார். (அதாவது அவரது காலத்தில் பெரும் பெரும் போர்கள் நடைபெறும்.)
47) அவர் அழகிலும், நன்மைகள் செய்வதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இணையானவராக இருப்பார்.
48) அவர் கலிமத்துல் அஸீஸ் - பிரியமான வார்த்தையாக இருப்பார்.
49) அவர் இறை வார்த்தைகளைக் கொண்டவராக இருப்பார். (கலிமத்துல்லாஹ் கான்)
50) அவர் மார்க்கத்தின் உதவியாளராக இருப்பார்.
51) அவர் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யக் கூடியவராக இருப்பார்.
52) அவர் இரண்டாவது பஷீராக இருப்பார்.

(ஜுமுஆ குத்பா 18.02.2011)




# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் செய்து கொண்ட உடன்படிக்கை

“ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மரணமடைந்தபோது அவர்களது மரணம் அகால மரணமாக இருந்தது என்பன போன்ற குரல்கள் எழுவதை நான் கேட்டேன். அவ்வாறு கூறுபவர்கள் அன்னார் தொடர்பாக அவர்கள் பொய்யர் (நவூதுபில்லாஹ்) என்று கூறவில்லை. (அஹ்மதிகள் தரப்பிலிருந்தே இத்தகைய குரல்கள் எழுந்தன). ஆனால் அவர்கள் நல்ல முறையில் இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்காத சமயத்தில் அவர்களின் வ.ஃபாத் நிகழ்ந்துள்ளது. சில முன்னறிவிப்புகளும் இன்னும் நிறைவேறவில்லை என்றே அவர்கள் கூறினர்.

அப்போது எனக்கு வயது 19 ஆக இருந்தது. இப்படிப்பட்ட சொற்களை நான் கேட்டதும் நான் அன்னாரது உடலின் தலைப்பகுதிக்கு அருகில் நின்றவாறு இறைவனை நோக்கி இவ்வாறு துஆ செய்தேன்:

“இறைவா! இவர் உனக்கு பிரியமானவர் ஆவார். இவர் உயிருடன் இருந்தவரை இவர் உனது மார்க்கத்தை நிலைநிறுத்துவதற்காக அளவற்ற தியாகங்களைச் செய்தார். இப்போது அவரை நீ உன்னிடம் அழைத்துக் கொண்ட பிறகு மக்கள் இவர் அகால மரணம் அடைந்து விட்டார் என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறக்கூடியவர்களுக்கும் அல்லது இவர்களது மற்ற தோழர்களுக்கும் இவ்வாறான விஷயங்கள் அவர்களது தடுமாற்றத்திற்கு காரணமாக அமைந்து விடலாம். இதன் மூலமாக ஜமாஅத்தின் ஒற்றுமை சிதறுண்டு போகலாம். எனவே, இறைவா! நான் உன்னிடம் இந்த உடன்படிக்கையை செய்கின்றேன். முழு ஜமாஅத்தும் உனது மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விட்டாலும் நான் இவருக்காக எனது உயிரை இவ்வழியில் அர்ப்பணித்தவாறு போராடுவேன்.

அப்போது இந்தப் பணியை நான்தான் செய்ய வேண்டும் என்பதை நான் புரிந்து கொண்டேன். இந்த விஷயம்தான் 19 வயதிலேயே எனது உள்ளத்திற்குள் எத்தகைய நெருப்பை நிரப்பி விட்டது என்றால் நான் எனது முழுவாழ்நாளையும் மார்க்கத் தொண்டாற்றுவதற்காக அர்ப்பணித்து விட்டேன். மற்ற எல்லா நோக்கங்களையும் கை விட்டு விட்டு இந்த ஒரு நோக்கத்தை மட்டும் முன்னால் வைத்துக் கொண்டேன். அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தப் பணிக்காக வந்தார்களோ அந்தப் பணியை இப்போது நான்தான் செய்ய வேண்டும். அப்போது எனது உள்ளத்தில் உருவாகிய அந்த உறுதிமிக்க எண்ணத்தை இன்று வரை அதனை, அதன் புத்தம்புது இனிமையான சுவையுடன் என்னுள் உணர்கின்றேன். அந்த சமயத்தில அவர்களது உடலின் தலைப்பகுதிக்கு அருகில் நின்றவாறு நான் செய்த உடன்படிக்கை என்னை வழிநடத்திச் செல்கிறது. அந்த உடன்படிக்கைதான் இன்று வரை என்னை, என்னுடைய எண்ணத்தில் தீர்க்கமாக நிலைநிறுத்தியுள்ளது.

எதிர்ப்பின் நூற்றுக்கணக்கான புயல்கள் என் முன்னால் எழுந்தன. ஆனால் அவை, இந்தப் பாறாங்கல்லுடன் மோதி தமது தலைகளையே உடைத்துக் கொண்டன. அதன் மீது அல்லாஹ் என்னை நிற்க வைத்திருந்தான். எனக்கு எதிராக செய்யப்பட்ட எதிரிகளின் ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு தீங்கும் தாமாகவே அவர்கள் பக்கமே திரும்பி விட்டது. இறைவன் தனது சிறப்பான அருள் மூலமாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு வெற்றிகளின் முகத்தைக் காட்டினான்.....

இந்த ஆன்மாவை தன்னிடம் ஏற்படுத்திக் கொள்வது ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரது பொறுப்பாக இருக்கின்றது. அதாவது மார்க்கப் பணியை அவர்தான் செய்ய வேண்டும். அதாவது, மார்க்கப் பணியைச் செய்கின்ற பொறுப்பும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பிரச்சாரத்தை முன்னேற்றமடையச் செய்கின்ற அந்தப் பொறுப்பும் என்னுடையதாகும் என்று அவர் கருத வேண்டும். எனவே, ஓர் உடன்படிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். நான் எல்லா நிலையிலும் மார்க்கத் தொண்டாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று எவர் உடன்படிக்கை செய்து கொள்வாரோ அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு எந்த நோக்கத்தை அடைய வேண்டியிருந்ததோ அதை அடைந்து விட்டார். அவர்களது பிரச்சாரத்தை முன்னேற்றமடையச் செய்வதுதான் அந்த நோக்கமாகும் இந்த ஆன்மா நம்மிடம் உருவாகி விட்டால் எந்தத் துன்பமும் நமக்கு துன்பமாகத் தெரியாது. வழியில் தென்படும் எல்லா துன்பங்களும் சாதாரணமாக நமக்கு தெரிய வரும்.” (ஜுமுஆ குத்பா 17.02.2012)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (அய்...) அவர்கள் கூறுகின்றார்கள்: “ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சாதனைகளுள் ஒன்றை மட்டும் கூறுகின்றேன். வெளிப்படையான மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்பதும் ஒரு முன்னறிவிப்பாகும். அதன் ஒரு பொலிவை உங்கள் முன் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய நூல்கள், சொற்பொழிவுகளின் தொகுப்பு ‘அன்வாருல் உலூம்’ என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை ‘அன்வாருல் உலூம்’ 26 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இவற்றில் இடம்பெற்றுள்ள அன்னாரது நூற்கள், சொற்பொழிவுகள், உரைகள் மொத்தம் 670 ஆகும். குத்பாத்தே மஹ்மூது இதுவரை 39 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இதில் 1959 -ஆம் ஆண்டு வரையுள்ள குத்பாக்கள் வெளிவந்து விட்டன. இவற்றில் மொத்தம் 2367 குத்பாக்கள் இடம்பெற்றுள்ளன. ‘த.ஃப்ஸீரே ஸகீர்’ 1071 பக்கங்களை கொண்டதாகும். ‘த.ஃப்ஸீரே கபீர்’ 10 தொகுதிகளைக் கொண்டது. இ.தில் திருக்குர்ஆனின் 59 சூராக்களுக்கு விளக்கவுரை எழுதப்பட்டுள்ளது. ‘த.ஃப்ஸீரே கபீர்’ 10 தொகுதிகளைச் சேர்த்து 5907 பக்கங்கள் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் எழுத்துக்கள் மற்றும் கூற்றுக்கள் ஆகியவற்றிலிருந்து குர்ஆன் விளக்கங்களை ஒன்றுசேர்க்குமாறு Research Cell துறையிடம் பணித்திருந்தேன். அது 9000 பக்கங்கள் ஆகிவிட்டது. இன்னும் பணி தொடர்ந்து நடக்கிறது. இது அன்னாருடைய பணிகள் குறித்த சுருக்கமான ஆய்வாகும்.”

(ஜுமுஆ குத்பா 21.02.20)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளுடனும் முறையற்று நடந்து கொண்டவர்களுடனும் நடந்து கொண்ட விதம் 3

- - - மவ்லானா ஹமீது கவ்ஸர், காதியான் - - -

தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்

செவியேற்போரே! நாம் சிந்திப்போமேயானால் இந்த சம்பவத்திலிருந்து இன்றைய காலகட்ட முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் படிப்பினை உள்ளது. இஸ்லாத்தின் கொடிய விரோதி தீய வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தான். நபி (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அன்னாரது சகிப்புத்தன்மை மற்றும் அமைதி பலன் தந்தன. மேலும் இந்த சகிப்புத்தன்மை, அமைதி பற்றி ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு தெரிய வந்த போது அவர் முஸ்லிமாகி விட்டார்.

அவையோரே! இன்றைய காலகட்டத்தில் நபி (ஸல்) அவர்களின் இந்த முன்மாதிரியையே பின்பற்ற வேண்டிய அவசியமுள்ளது. ஒருவேளை எங்காவது, எந்த நாட்டிலாவது நபி (ஸல்) அவர்களைப் பற்றி ஏதேனும் ஆட்சேபனைக்குரிய கட்டுரையோ அல்லது கார்டூனோ வெளியிடப்படுகிறது என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய நடைமுறையின்படி முஸ்லிம்கள் அமைதி காக்க வேண்டும். மேலும் அதற்கு பதிலாக அதிகமதிகமாக கட்டுரைகள் எழுதியும், மாநாடுகளை நடத்தியும் நபி (ஸல்) அவர்களது அழகிய பண்புகளை வெளிக்கொண்டு வர வேண்டும். இதனால் அறியாத மக்கள் தாக்கத்திற்குள்ளாகி அவமரியாதை செய்பவர்களுக்கு எதிராக குரலை உயர்த்தியவாறு விளக்கம் அளிக்க வேண்டும். இதுதான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நடைமுறையாகும். இதன் நல்ல விளைவுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.'.பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லா-ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:


நாம் தெரிவிக்கும் மறுப்பினால் எப்போதும் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் தூய முன்மாதிரி மெருகேறியே வெளிப்படும். திருக்குர்ஆனின் போதனைகள் பிரகாசமாகி விடும். எப்போதும் அவ்வாறே வெளிப்படவும் வேண்டும். நபி (ஸல்) அவர்களின் மீது தொடுக்கப்படும் புனிதமற்ற தாக்குதல்களைக் கண்டு வீண் செயல்களில் ஈடுபடுவதை விட்டு விட்டு அல்லாஹ்விடம் குனிந்து, அவனிடம் உதவி கேட்பவர்களாக நாம் ஆகின்றோம். (ஜுமுஆ பேருரை பிப்ரவரி 10, 2006)

சபையோரே! ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) என்ற ஒரு சஹாபி கூறுகின்றார்கள்: ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் கஅபா ஆலயத்தின் அருகில் நின்று கொண்டு தொழுது கொண்டிருந்தார்கள். குரைஷிய கா.'.பிர்களின் ஒரு கூட்டம்



அருகிலேயே கூட்டம் கூட்டி அமர்ந்திருந்தனர். அவர்களுள் ஒருவன் உங்களுள் எவரும் ஒட்டகத்தின் அசுத்தமும், சாணமும் நிறைந்த குடலை இந்த முஹம்மது (ஸல்) அவர்களின் இரு தோள்பட்டைக்கு மத்தியில் அவர் ஸஜ்தா செய்கின்ற போது வைப்பாரா? என்று கூறினான். ஓர்

அநீதியிழைக்கும் நிராகரிப்பாளன் சென்று குடலை எடுத்து வந்து அன்னாரது தோளின் மீது வைத்து விட்டான். நமது தலைவர் ஸஜ்தாவின் நிலையிலேயே கிடந்தார்கள். மக்கத்து கா∴பிர்கள் சிரிக்கத் தொடங்கினர். ஒருவர் மற்றவர் மீது விழுந்து விழுந்து சிரித்தனர். இக்காட்சியைக் கண்ட ஒருவர் சென்று ஹஸ்ரத் ∴பாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அவர்கள் ஓடோடி வந்தார்கள். மேலும் அந்த குடலை அன்னாரது தோளிலிருந்து எடுத்தார்கள். ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் தொழுகையினை நிறைவேற்றி விட்டு அல்லாஹுும்ம அலைக்க பி குரைஷ் அல்லாஹுும்ம அலைக்க பி குரைஷ் - அல்லாஹ்வே! நீயே குரைஷியர்களைக் கண்டு கொள். அல்லாஹ்வே! நீயே குரைஷியர்களைக் கண்டு கொள் என்று கூறினார்கள். பிறகு அன்னார், அல்லாஹ்வே! அம்ர் பின் ஹிஷாம், உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ, வலீத் பின் உத்பா, உமய்யா பின் கல∴ப், உக்பா பின் அபீ முஐத், அம்மார் பின் வலீத் ஆகியோரை நீயே கண்டு கொள் என்று பெயர்களைக் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் என் கண்களால் இவர்கள் அனைவரும் பத்ர் மைதானத்தில் கொல்லப்பட்டதைக் கண்டேன். பிறகு அவர்கள் பத்ர் களத்தில் ஒரு பள்ளம் தோண்டி இழுத்து வீசப்பட்டார்கள். பிறகு ரஸுல் (ஸல்) அவர்கள் கிணற்றுக்காரர்கள் சாபத்தால் சூழப்பட்டனர் என்று கூறினார்கள். (புகாரி, கிதாபுஸ் ஸலாத், பாபுல் மர்அதி தத்ரஹு அனில் முஸல்லி ஷய்அன் மினல் அஸா)



அவையோரே! நபி (ஸல்) அவர்கள் அருளுக்குரிய நபித்துவம் பெற்று பத்து ஆண்டுகள் கடந்தும் மக்காவாசிகளின் விரோதமும், அவமரியாதை செய்வதும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தன. எனவே அன்னார் தப்லீக் செய்வதற்காக தாயி∴ப் நகரத்திற்குச் செல்ல தீர்மானித்தார்கள். இந்நகரம் மக்காவின் தென்கிழக்குப் பகுதியில் நாற்பது மைல் தொலைவில் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் 619 -ஆம் ஆண்டு மே அல்லது ஜுன் மாதம் அங்கு சென்றார்கள். அங்கு பத்து நாட்கள் தங்கியிருந்தார்கள். தாயி∴ப்வாசிகளும் மிகவும் மோசமாக நடந்து கொண்டார்கள். அந்நகரத் தலைவரான அப்து யாலீல் என்பவன் நகரிலிருந்த போக்கிரிகளை அன்னாருக்கு எதிராகத் தூண்டி விட்டான். நபி (ஸல்) அவர்கள் நகரிலிருந்து வெளியேறியதும் அந்த தீய மரியாதையற்ற மக்கள் அன்னாரது உடலே இரத்தத்தால் நனையும் அளவிற்கு அன்னார் மீது கற்களை வீசினார்கள். மூன்று மைல் தூரம் வரை அம்மக்கள் அன்னாரை தீய வார்த்தைகளால் பேசியவாறும், கற்களால் எறிந்தவாறும் வந்தனர்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் மு∴மின்களின் தாயான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஆயிஷாவே! உனது சமுதாயத்தாரிடமிருந்து மிகப் பெரும் கஷ்ட காலத்தை நான் காண வேண்டியிருந்தது. பிறகு அன்னார் தாயி∴ப் நகரப் பயணத்தின் நிலையை எடுத்துரைத்தார்கள். மேலும் கூறினார்கள்: அப்பயணத்தில் இருந்து திரும்புகையில் என்னிடம் மலைகளின் மலக்கு வந்து, யா முஹம்மது! இன் ஷி∴த அன் உத்பிக அலைஹிமுல் அஹ்ஷபைன் (புகாரி, கிதாப் பத்யில் கல்க். பாப் இஸா கால அஹதுகும் ஆமீன்) முஹம்மதே! நீங்கள் விரும்பினால் நான் இம்மனிதர்களை இந்த இரண்டு பக்கங்களில் உள்ள மலையினால் நசுக்கி விடவா? என்று கேட்டார். ஒருவேளை ரஸுல் (ஸல்) அவர்கள் தாயி∴ப்வாசிகளுக்கு தண்டனையை கொடுக்க விரும்பி இருந்தாலோ அல்லது அழித்திட விரும்பியிருந்தாலோ உடனே அவர்களை நசுக்கி விடுங்கள். அவர்களது குற்றம் மன்னிக்கத்-தக்கதல்ல என்று பதில் அளித்திருப்பார்கள். ஆனால் அத்துன்பத்தின் தருவாயிலும் அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையான முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் மலைகளின் மலக்கிற்கு இவ்வாறு பதிலளித்தார்கள்:

பல் அர்ஜு அன் யுஹ்ரி ஜல்லாஹு மின் அஸ்லாபிஹிம் மய்ய∴புதுல்லாஹ் வஹ்தஹு லா யுஷ்ரிகு பிஹி ஷைஆ. அன்னார் அக்கொடியவர்கள் அநீதி இழைத்திருந்தும், இவர்களை அழித்து விட வேண்டாம். அல்லாஹ் இவர்களின் சந்ததி-யினர்களுள் ஓரிறைவனை வணங்கக்கூடிய, அவனுக்கு யாரையும் இணை வைக்காத மக்களையும் பிறக்கச் செய்வான் என்று கூறினார்கள்.

எனவே ஒவ்வொரு அவமரியாதை செலுத்துபவர்-களையும் கொல்லவும், மரண தண்டனை விதிக்கவும் துடித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள், இச்சம்பவத்தில் இருந்து அறிவுரை பெற வேண்டும். ஒருவேளை இம்முஸ்லிம்கள் ரஸுல் (ஸல்) அவர்களின் வழியில் சென்றால், இன்றைய நாட்களில் அவதூறை வீசும் மக்களின் சந்ததிகளில் இருந்து அல்லாஹ்வை வணங்கக்கூடிய அல்லாஹ்வின் தூய அடியார்கள் பிறக்கலாம் என்பது தொலைவில் இல்லை.

ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து ஏழாவது ஆண்டு கழிந்து கொண்டிருந்தது. ஹிஜ்ரி வருடம், ஜமாதிவுஸ்ஸானி, அதாவது கி.பி. 628 -ம் ஆண்டு அக்டோபர், நவம்பரில் அன்னாருக்கு நஜத் என்னுமிடத்தில் அத்∴பான் பகுதியினரும், பனூ சு∴லா



என்போரும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த ஆயத்தமாகின்றனர் என்ற தகவல் கிடைத்தது. அன்னார் சில நூறு சஹாபாக்களுடன் நடக்கவிருக்கும் தாக்குதலை தடுப்பதற்காக நஜத் பகுதியை நோக்கி புறப்பட்டார்கள். அத்ஃபான் பகுதியினர் பயந்து ஓடி விட்டனர். நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்புகையில் வழியிலிருந்த ஒரு நிழல் தரும் மரத்தின் கீழ் ஓய்வு எடுப்பதற்காக நின்று விட்டார்கள். மேலும் வாளினை அந்த மரத்தில் தொங்க விட்டு விட்டார்கள். சஹாபா பெருமக்களும் ஓய்வெடுப்பதற்காக பல்வேறு மரங்களின் நிழலில் ஓய்வு பெற ஆரம்பித்தனர். அப்போது ஓர் எதிரி வந்து அன்னாரின் வாளினை கையில் எடுத்து அன்னாரை தூக்கத்திலிருந்து எழுப்பி, 'மய் யம்னவுக மின்னீ' - உம்மை என்னிடமிருந்து யாரால் காப்பாற்ற முடியும்? என்று கேட்டான். ரஸூல் (ஸல்) அவர்கள் அல்லாஹ் என்று பதில் அளித்தார்கள். இதனை கேட்டவுடன் வாள் அவனது கையிலிருந்து விழுந்து விட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் வாளை எடுத்து அவமரியாதை செய்த எதிரியிடம், இப்போது உன்னை என்னிடமிருந்து யாரால் காப்பாற்ற இயலும் என்று கேட்டார்கள். அப்போது அவன் அச்சமுற்று, தாங்கள்தான் என் மீது கருணை காட்ட வேண்டும் என்று கூறினான். அன்னார் அவனிடம், நீ அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை என்றும் நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுகிறாயா? என்று கேட்டார்கள். அத்தீய எதிரி 'இல்லை' ஆனால் இனி ஒருபோதும் நான் உங்களுடன் சண்டையிட மாட்டேன் என்று தங்களுக்கு வாக்குறுதியளிக்கிறேன் என்று பதில் கூறினான். ரஹ்மத்துல் லில் ஆலமீன் அத்தீய எதிரியை விடுதலை செய்து விட்டார்கள். அவன் தன்னுடைய கூட்டத்தினரை சந்தித்து அவர்களிடம் நான் எப்படிப்பட்ட எதிரியிடமிருந்து வருகிறேன் என்றால் அவர்தான் இவ்வுலகின் மிகச் சிறந்தவர் என்று கூறினான். (ஆதாரம் புகாரி. கிதாபுல் மகாஸி. பாப் கஸ்வது ஸாதிர் ரிகா)

கண்ணியமிக்கோரே! உலக சட்டத்தைப் பொருத்த வரை கொலை தாக்குதலை நடத்துபவர்களுக்கான தண்டனை மரணம் ஆகும். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இப்படிப்பட்ட கொடிய குற்றத்தை செய்த துரோகிகளையும் மன்னித்து ஒரு தூய முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். நபித்துவத்தை இழிவுபடுத்தினான் என்ற பெயரில் வீணாக கொலை மற்றும் மரணத்தைப் பற்றி பேசுகின்ற முஸ்லிம்கள் இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.


நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ரஸூலை அவமதித்த பெரும் தீயவர்களுள் ஸுமாமா பின் உஸாலும் ஒருவர் ஆவார். அவர் யமாமாவைச் சார்ந்தவராவார். எப்போதும் குற்றமற்ற முஸ்லிம்களை கொல்வதில் நாட்டமுள்ளவராக இருந்தார். ஒருமுறை முஸ்லிம்கள் அவரை கைது செய்வதில் வெற்றி பெற்றனர். நபி (ஸல்) அவர்கள் அப்போதைய வழக்கத்திற்கு ஏற்ப மஸ்ஜிது நபவியின் வளாகத்திலுள்ள தூணில் கட்டி வைத்து கைது செய்தனர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தினமும் காலை நேரம் ஸுமாமாவின் அருகில் சென்று நலம் விசாரித்து விட்டு ஸுமாமா உனது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு, நான் தகுதியானவன். ஏனெனில் என் மீது எனக்கு எதிராக கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள் பரிகாரம் ஏதும் நாடினால் அதற்கும் நான் தயாராக உள்ளேன் என்று கூறினான். மூன்று நாட்கள் வரை இதே கேள்வி பதில் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் மூன்றாம் நாள் நபி (ஸல்) அவர்கள் தாமாகவே சஹாபா (ரலி) அவர்களிடம் ஸுமாமாவை அவிழ்த்து விடுதலை செய்து விடுங்கள் என்று கூறினார்கள். சஹாபிகள் இப்போது அவர் தனது நாட்டிற்கு திரும்பி விடுவார் என்றுதான் எண்ணி இருப்பார்கள். அவர் அங்கிருந்த ஒரு தோட்டத்திற்கு சென்று அங்கு குளித்து விட்டு திரும்பி வந்தார். வந்ததும் நபி (ஸல்) அவர்களது கையில் முஸ்லிமாகி விட்டார்.

வல்லாஹி மாகான அலல் அர்ளி வஜ்ஹுன் அப்களு இலா மிவ் வஜ்ஹிக ஃபகத் அஸ்பஹ வஜ்ஹுக அஹப்புல் உஜூஹி இலய்ய வல்லாஹி மா கான மின் தீனின் அப்களு இலா தீனிக ஃப அஸ்பஹ தீனுக அஹப்புல்லதீன இலய்ய வல்லாஹி மாகான மின் பலதி அப்களு இலய்ய மின் பலதிக ஹப அஸ்பஹ பலதுக அஹப்புல் பிலாதி இலய்ய (புகாரி. கிதாபுல் மகாஸி)

முஹம்மதே! (ஸல்) இறைவன் மீது ஆணையாக! இவ்வுலகில் உள்ள முகங்களுள் என்னைப் பொருத்த வரையில் மிக அதிகமாக வெறுக்கத்தக்க முகமாக உங்களது முகம் இருந்தது. ஆனால், இப்போது இறைவன் மீது ஆணையாக! என்னை பொருத்தவரையில் தங்களது முகம் அனைத்தையும் விட பிடித்தமானதும் மற்றும் அன்பிற்குரியதும் ஆகும். இறைவன் மீது ஆணையாக! என்னை பொருத்தவரையில் தங்களது மார்கத்தை விட வேறெந்த மார்க்கமும் வெறுக்கத்தக்கதாக இருந்ததில்லை.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

2

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

சர் லீபல் கிரிஃபின் மற்றும் கர்னல் மேஸ்ஸி ஆகியோரால் எழுதப்பட்டு திரு. ஹென்றி கிரெய்க் (1910) என்பவரால் திருத்தி அமைக்கப்பட்ட 'பஞ்சாபிய ஆட்சியாளர்கள்' என்ற நூலில் பின்வருமாறு விவரம் காணப்படுகின்றது:

''பாபரின் ஆட்சிக் காலத்தின் இறுதி ஆண்டான 1580 –ல் சமர்கந்தைச் சேர்ந்த முகலாயரான ஹாதி பேக் என்பவர் பஞ்சாபிற்கு குடிபெயர்ந்து குர்தாஸ்பூர் மாவட்டத்தில் குடியமர்ந்தார். அவர் கல்வியறிவு மிக்க மனிதராக விளங்கினார். காதியானைச் சுற்றியுள்ள 70 –க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டு அவரே நிர்மானித்ததாகக் கூறப்படும் இஸ்லாம்பூர் காஸி என்ற பகுதிக்கு காஸி அல்லது மாஜிஸ்ட்ரேட் ஆக நியமிக்கப்பட்டார். அப்பகுதியே பின்னர் காதியான் என்று திரிந்து வழங்கலாயிற்று. அக்குடும்பத்தினர் பேரரசின் கீழ் பல தலைமுறைகள் மரியாதைக்குரிய பதவிகளை வகித்து வந்தனர். சீக்கியர்களின் அதிகாரம் ஓங்கிய பொழுது தான் அவர்கள் வறுமைக்கு ஆளாயினர்.

குல் முஹம்மது, அவருடைய மகன் அதா முஹம்மது ஆகிய இருவருக்கும் காதியானைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆண்டு வந்த ராம்காரியா, கனகஹயா மிஸால்ஸ் பகுதி ஆட்சியாளரோடு தொடர்ந்து தகராறு நீடித்து வந்தது. இறுதியில் தம் அதிகாரம், செல்வம் ஆகியவற்றை இழந்த நிலையில் அதா முஹம்மது பெகோவால் என்ற இடத்தில் குடியேறினார். அங்கு (கபூர்தலாவின் அப்போதைய மன்னரின் முன்னோரான) சர்தார் ஃபதேஹ் சிங், மிர்ஸா ஆலுவாலியாவின் அரவணைப்பில் 12 ஆண்டு காலம் அமைதியாக வாழ்ந்து வந்தார். அவருடைய மரணத்திற்குப் பின் ராம்காரியா மிஸல்ஸ் பகுதியின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ரஞ்சித் சிங், மிர்ஸா குலாம் முர்தஸாவைக் காதியானுக்கு வரவழைத்து அவருடைய முன்னோர்களின் கைவசம் இருந்த நிலப்பகுதியில் பெரும் பகுதியை அவரிடம் ஒப்படைத்தார்.

அதன் பின் அவர் தமது சகோதரர்களுடன் மன்னரின் இராணுவத்தில் சேர்ந்து காஷ்மீர் எல்லைப் பகுதியிலும் மற்ற இடங்களிலும் சிறப்பாகப் பணியாற்றினார்.

நவ் நிஹால் சிங், ஷேர்சிங் ஆகியோர் காலத்தில் மிர்ஸா குலாம் முர்தஸா முன்னிலை பணியாற்றினார். 1841 –ஆம் ஆண்டு அவர் ஜெனரல் வெண்டூராவுடன் மண்டி, குலூ போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 1843 –ஆம் ஆண்டு ஒரு தரைப்படைக்குத் தலைமையேற்று பெஷாவருக்குச் சென்றார். ஹஸாராவில் கிளர்ச்சி ஏற்பட்ட போது சிறப்பாகப் பணியாற்றிப் பாராட்டுப் பெற்றார். 1848 –ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியின் போது தமது அரசாங்கத்திற்கு விசுவாசம் கொண்டவராக அதன் அணியில் நின்று போராடினார். அவருடைய சகோதரரான குலாம் முஹ்யுத்தீனும் அக்காலத்தில் சிறப்பாகப் பணியாற்றினார். பாய் மஹராஜ் சிங் திவான் மூல்ராஜுக்கு ஆதரவாக முல்தானை நோக்கி படையெடுத்து வந்த பொழுது, குலாம் முஹ்யுத்தீன் லங்கர் கான் ஸாஹிவால், ஸாஹிப்கான் திவானாகிய ஜாகிர்தார்களோடு சேர்ந்து முஹம்மதியப் படையைத் திரட்டி மிர்ஸா சாஹிப் தயாளின் படையோடு சேர்த்து கிளர்ச்சிக்காரர்களைத் தாக்கி முற்றிலுமாகத் தோற்கடித்தார். அவர்கள் சீனாவின் பக்கம் ஓடினர். 600 –க்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

சமஸ்தானங்கள் இணைக்கப்பட்ட பொழுது குடும்பத்திற்குச் சொந்தமான ஜாகிர்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் குலாம் முர்தஸாவுக்கும் அவருடைய சகோதரருக்கும் ரூ.700/– ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. காதியான் மற்றும் அதனைச் சுற்றியிருந்த கிராமங்களின் உரிமை அவர்கள் வசம் இருந்தது.

மிர்ஸா குலாம் முர்தஸா (மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தந்தை) ஒரு சிறந்த மருத்துவர். அவர் பக்பன்புராவில் ரூஹுல்லாஹ் என்பவரிடமும், டெல்லியில் ஷரீஃப் கான் என்பவரின் குடும்பத்தினரிடமும்

மருத்துவம் பயின்றிருந்தார். அவர் எந்தக் கூலியையும் எதிர்பார்க்காமல் மக்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்தார். ஏழைகளையும், பணக்காரர்களையும் ஒன்று போல் நடத்தினார். படாலாவை ஆண்ட ராஜா தேஜாசிங் ஒருமுறை அவருடைய மருத்துவ சேவைக்காக அவருக்கு அதிகமாக பணமும், ஷிதாப்காட், ஹஸன்பூர் ஆகிய இரு கிராமங்களையும் அன்பளிப்பாக வழங்கினார். அந்த இரு கிராமங்களும் ஒரு காலத்தில் அவருடைய முன்னோர்க்குச் சொந்தமானவையாக இருந்து வந்தன; ஆனால் அவ்வாறு மருத்துவத்திற்காக கூலி பெற்றுக் கொள்வது தமக்கும் தம்முடைய குழந்தைகளுக்கும் இழிவாகும் என்று கூறி அதனை ஏற்க மறுத்து விட்டார்.

மஹாராஜா ஷேர்சிங் ஒருமுறை வேட்டையாடுவதற்காகச் சென்ற பொழுது கானுவான் என்ற இடத்திற்கு வந்தார். மிர்ஸா குலாம் முர்தஸாவும் அவரோடு சென்றிருந்தார். மஹாராஜாவின் உதவியாளர்களில் ஒருவர் கடுமையான குளிர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவரை விலை குறைந்த, சாதாரண மருந்தைக் கொடுத்துக் குணமாக்கினார். பிறகு ஷேர்சிங்கும் அதே போன்று கடுமையான குளிர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவருக்கு விலையுயர்ந்த மருந்துகளைப் பரிந்துரைத்தார். அப்போது மஹாராஜா அவரிடம் அவ்விதம் வித்தியாசமாக மருந்துகளைப் பரிந்துரைத்ததற்கான காரணத்தை வினவினார். அதற்கு உதவியாளரும், மஹாராஜாவும் சமமானவர்கள் என தாம் கருதவில்லை என்று மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் பதிலளித்தார். இந்தப் பதிலைக் கேட்டு மஹாராஜா மிகவும் மகிழ்ந்து போனார்.

மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் தமது எதிரிகளிடம் கூட பெருந்தன்மையோடு நடந்து கொள்வார். ஜோதி என்ற பிராமணர் அவரை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார். ஆனால் அவரும் நோய்வாய்ப்பட்ட போது மிகவும் அனுதாபத்தோடு அவருக்கு மருத்துவம் செய்தார். ஒருமுறை அவருடைய எதிரிகளுள் ஒருவர் இறந்தபொழுது மற்றொருவர் வாழ்த்துத் தெரிவித்தார். அதைக் கண்டு மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் மிகுந்த வெறுப்படைந்தார். அந்த மனிதரை தம்முடைய அவையை விட்டு வெறியேறுமாறு பணித்தார்.

அவர் தமது சுயமரியாதையை பேணுவதில் மிகவும் கவனமாக இருந்தார். ஒருமுறை அவர் லாஹூர் கமிஷனராக இருந்த திரு. ராபர்ட் கஸ்ட் என்பவரை ஒரு நோக்கத்திற்காகப் பார்க்கச் சென்றிருந்தார். உரையாடலுக்கு இடையில் திரு. கஸ்ட் அவரிடம் ஸ்ரீகோபிந்த்பூருக்கும், காதியானுக்கும் இடையில் ஆகாய மார்க்கமாக எவ்வளவு தூரம் என அதிகாரத் தோரணையோடு வினவினார். உடனே மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுவதற்கு தாம் ஒன்றும் அவரது பணியாள் அல்ல என்று கூறியதோடு அங்கிருந்து எழுந்து செல்லவும் முற்பட்டார். கமிஷனர் தமது தவறை உணர்ந்தார். இப்படிப்பட்ட சுயமாரியாதை உணர்வையும், கண்ணியத்தையும் கண்டு பெரிதும் கவரப்பட்டார்.

மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபின் மகன்களில் ஒருவரான மிர்ஸா குலாம் காதிர் (ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அண்ணன்) காவல்துறையில் துணை ஆய்வாளராக இருந்தார். கமிஷனரான திரு. நிஸ்பட் ஒருமுறை அவரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்தார். கமிஷனர் காதியானுக்கு வந்த பொழுது அதைப் பற்றி மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் தமது மகன் உண்மையிலேயே தவறிழைத்திருந்தால், பிற கண்ணியமான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பாடமாக அமைகின்ற விதத்தில் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனப் பதில் கூறினார். கமிஷனர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இப்படிப்பட்ட தந்தைக்கு மகனாக பிறந்த ஒருவருக்குத் தண்டனை எதுவும் தேவையில்லை என்று கூறி மிர்ஸா குலாம் காதிருக்கு மன்னிப்பு வழங்கினார்.

மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் கம்பீரமான தோற்றம் கொண்டிருந்தார். அவரைக் கண்டு மக்கள் அஞ்சினர். யாருமே அவர் முகத்தை நேருக்கு நேர் பார்க்கப் பயந்தனர். அவருடைய உறவினரான மிர்ஸா இமாமுத்தீன் என்பவர் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபை கொலை செய்வதற்காக பைனீ என்ற இடத்தைச் சேர்ந்த சோசெட் சிங் என்பவரை கூலிக்கு அமர்த்தினார். அவரைக் கொல்வதற்காகப் பலமுறை நான் (சோசெட் சிங்) மதில் மேல் ஏறிச் சென்றேன். ஆனால் அவரைக் கண்டதும் பயத்தால் அவரை நெருங்கவே துணியவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் ஒரு கவிஞராகவும் விளங்கினார். மிர்ஸா குலாம் முர்தஸாவின் கவிதைகள் அனைத்தையும் சேகரித்து, அவற்றை 'பஞ்சாபி அக்பார்' என்னும் பத்திரிகையின் ஆசிரியரான ஹாஃபிஸ் உமர் தரஸ் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வாசிரியர் சில காலத்தில் இறந்து விட்டதால் எல்லாக் கவிதைகளும் காணாமல் போய் விட்டன



மஸ்ஜிது அக்ஸா, காதியான் பழைய தோற்றம்

என்றும் மிர்ஸா சுல்தான் அஹ்மது ஒருமுறை குறிப்பிட்டார். மிர்ஸா குலாம் காதிரும் ஒரு கவிஞராக விளங்கினார்.

(காதியானிலுள்ள) மஸ்ஜிது அக்ஸா என்னும் பள்ளிவாயில் மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களால் கட்டப்பட்டது தான். அந்தப் பள்ளிவாயில் அமைந்திருக்கும் இடம் அக்காலத்தில் சீக்கியர்களுக்குச் சொந்தமாக இருந்தது. அவர் அதனை அக்காலத்தில் மிகவும் அதிகமான விலையாகக் கருதப்பட்ட ரூ.700/– க்கு ஓர் ஏலத்தில் வாங்கினார். அதனை என்ன விலை கொடுத்தேனும் வாங்கியே தீர்வது என்று அவர் முடிவு செய்திருந்தார். உலக விஷயங்களில் மூழ்கித் தம் வாழ்நாளைக் கழித்ததற்கு அதன் மூலம் பரிகாரம் தேட எண்ணினார். ஆனால் அந்தப் பள்ளிவாயில் ஒரு காலத்தில் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியப் போகின்றது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அது மீண்டும் விரிவுபடுத்திக் கட்டப்படுவதிலிருந்து அது கட்டப்பட்ட நோக்கத்தின் உண்மைத்தன்மை தெளிவாகிறது. கோயிலாக மாற்றப்பட்டிருந்த மற்றொரு பள்ளிவாயிலையும் மீட்பதற்கு முயற்சி மேற்கொண்டார். ஆனால் அதற்காக அவர் மேற்கொண்ட சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன.

மிர்ஸா குலாம் முர்தஸா தம் வாழ்நாள் முழுவதும் தமது முன்னோர்களுக்குச் சொந்தமாய் இருந்த சொத்துக்களை மீட்பதற்காக முயற்சி செய்தார். இந்த முயற்சியில் அவர் ரூ.70,000/– வரை செலவு செய்தார். ஆனால் அதிக பலன் எதுவும் பெறவில்லை. அவருடைய முயற்சிகள் வீணானவை என்று கருதியதால் அவருடைய குடும்பத்தார் யாரும் அம்முயற்சியில் அவருக்கு உதவி செய்யவில்லை. ஆனால் அதன் மூலம் அவர் அடைந்த சிறு பலன்களில் அவரது உறவினர்கள் தமது பங்கைப் பெற்றுக் கொண்டனர். சொத்தின் உரிமையாளர்களாக மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபின் பெயரோடு சேர்த்து அவருடைய பங்காளிகளின் பெயர்களையும் சேர்த்து உரிமை கோரும் விண்ணப்பங்களில் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபின் ஏஜெண்ட் முட்டாள்தனமாக குறிப்பிட்ட காரணத்தால் இதைச் செய்ய வேண்டியதாயிற்று.

ஒருமுறை மிர்ஸா குலாம் முர்தஸா தமது கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கம்பீரமாகத் தமது வீட்டிற்கு வருவதாகக் கண்டார். அவர்களை வரவேற்பதற்கும், கிழக்கத்திய அறிஞர்கள் இயேசுவுக்கு மரியாதை செய்தது போன்று தங்கம், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றைக் கொண்டு மரியாதை செய்வதற்காகவும் விரைந்து செல்கிறார். ஆனால் அவர் தமது பையில் கை வைத்த பொழுது அதில் ஒரு ரூபாய் நாணயம் மட்டுமே இருப்பதாகவும் அதுவும் செல்லாத நாணயமாகஇருப்பதையும் காண்கிறார். அது அவரின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. அந்நிலையில் அவர் விழித்தெழுந்தார். தாம் இறைவன் மீதும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்கள் மீதும் கொண்ட அன்போடு, தமக்கு உலகத்தின் மீதுள்ள பற்றும் கலந்துவிட்டதால் அது செல்லாத நாணயத்தை ஒத்ததே என்று அவர் அக்கனவுக்கு விளக்கம்




கொண்டார். உலகியல் விஷயங்களில் தமக்கிருந்த ஈடுபாடு குறித்த அதிருப்தி அவருக்கு அதிகமாக இருந்து வந்தது. தாம் பெற்றிருந்த அனைத்து வசதிகளையும், ஆற்றல்களையும் இறைவழியில் செலவு செய்யாததைப் பற்றி அவர் அடிக்கடி வருந்தினார். அவர் தமது உயிலில் தாம் இறந்தபின் தம்மை நகரின் மத்தியப் பகுதியில் தாம் கட்டிய பள்ளிவாயிலின் ஒரு மூலையில் அடக்கம் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். ஒருவேளை அதன் மூலம் இறைவன் தம்மீது கருணை கொள்ளலாம் எனக் கருதினார். தமது கல்லறை அமைய வேண்டிய இடத்தையும் அவரே தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டார். அவரது விருப்பப்படி அதே இடத்தில் தான் இன்றும் அவரது கல்லறை அமைந்துள்ளது. அந்தப் பள்ளிவாயிலின் கட்டுமானப் பணிகள் நிறைவுறும் கட்டத்தில், 1876 –ஆம் ஆண்டு தமது 85 –வது வயதில் வயிற்றுப் போக்கு நோயால் அவர் மரணமடைந்தார்.

மிர்ஸா குலாம் முர்தஸா அவர்கள் ஹோஷ்யார்பூர் மாவட்டத்திலுள்ள அய்மா கிராமத்தைச் சேர்ந்த மிர்ஸா ஜமியத் பேக் என்பவரின் சகோதரியான சிராக் பீபியைத் திருமணம்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம் ...)

# இறை மன்னிப்பின் காட்சிகள்

## - - - ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) - - -

3

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**




[இறுதி தீர்ப்பு நாளின் போது இறை மன்னிப்பின் தோற்றம் வெளிப்பட்ட குறிப்பிட்ட ஒரு நாளில் மக்களின் செயல்களின் கணக்குகள் பரீசீலிக்கப்படும் பரந்த மைதானத்தில் கு.்.ப்ரான் என்னும் மலக்கு என்னை அழைத்துச் செல்கிறார். அங்கு இறை மன்னிப்பின் பல்வேறு காட்சிகளை நங்கள் பார்த்துக் கொண்டே சென்று கொண்டிருக்கிறோம்]

11) நானும், கு.்.ப்ரானும் மேலும் முன்னேறிச் சென்றோம். அங்கு ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அவரது செயல்களின் பதிவேட்டில் சில பலவீனங்கள் இருந்தன. ஆனால் அவர் தனது பெற்றோரின் கபர்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சென்று துஆ செய்து வந்திருந்தார். எனவே அவர் மன்னிக்கப்பட்டார்.

வலப்பக்கம் நான் பார்த்தேன். அங்கு ஒரு பெரும் கூட்டம் நின்று கொண்டிருந்தது. அவர்களில் எவருக்குமே மன்னிக்கப்படும் அளவுக்கு பதிவேட்டில் நற்செயல்கள் இருக்கவில்லை. ஆனால் அனைவரும் மன்னிக்கப்-பட்டனர். ஏனெனில் ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் தஹஜ்ஜுத்தில் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள். “நீ அவர்களுக்கு தண்டனை தந்தால் அவர்களோ உனது அடியார்கள். நீ அவர்களை மன்னித்து விட்டால் நிச்சயமாக நீ வல்லமை மிக்கவனும் ஞானமிக்கவனுமாவாய்” (5:119) என்ற வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள்.

12) அங்கிருந்து நாங்கள் ஓரிடத்திற்கு வந்தோம். அங்கு ஒரு கொலையாளியின் கணக்கு தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவரது விவகாரம் பேசப்படுவது எனக்கு நன்கு கேட்டது. அதாவது அவர் 99 கொலைகள் செய்தார். பின்னர் அவர் கழிவிரக்கம் கொண்டு தவ்பா செய்ய முன்வந்தார். அதற்காக அவர் ஒரு துறவியிடம் சென்று தனது நிலையை கூறி தனது தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுமா? என்று கேட்டார். அந்தத் துறவி உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட முடியாத அளவு மிகப் பயங்கரமானவை என்று கூறிவிட்டார். கோபம் அடைந்த அந்த கொலையாளி அந்த துறவியையும் கொலை செய்துவிட்டார். மக்கள் அவரிடம் ஒரு அறிஞரைக் குறித்து கூறினர். உனது தவ்பா விஷயத்தில் அவர் ஏதேனும் வழி கூறலாம் என்று கூறினர். எனவே அந்த கொலையாளி அந்த அறிஞர் இருக்கும் நகரை நோக்கி பயணம் மேற்கொண்டார். வழியில் மரணம் அடைந்துவிட்டார். இதனால் தண்டனையின் மலக்கு-களுக்கும் மன்னிப்பின் மலக்குகளுக்கும் இடையில் பெரும் சர்ச்சை உருவாகி விட்டது. தண்டனையின் மலக்குகள் அவர் ஒரு பயங்கர கொலையாளி மற்றும் கொள்ளைக்காரன் என்று கூறினர். மன்னிப்பின் மலக்குகள் கூறினர் அவர் உண்மையான தவ்பா செய்வதற்காக சென்று கொண்டிருந்தார் என்ற தமது வாதத்தை முன்வைத்தனர். எனவே இதனால் அங்கு பெரும் கூச்சல் ஏற்பட்டது.

அப்போது அல்லாஹ்வின் அரியணையிலிருந்து தீர்ப்பு அறிவிக்கப்பட்டது எனக்கு கேட்டது. அந்த தீர்ப்பில் அவரது வீட்டிலிருந்து அவர் மரணமடைந்த இடம் வரைக்குமான தூரத்தை அளவிடும் படியும் பின்னர் அவர் மரணமடைந்த இடத்திலிருந்து அந்த அறிஞர் இருக்கும் நகரம் வரைக்கும் உள்ள தூரத்தை அளவிடும் படியும் கூறப்பட்டது. பின்னர் இது குறித்து மீக்காயில் மலக்கின் துறை சார்பாக ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அவரது மரணித்த உடல் ஒரு சில அங்குலங்கள் வித்தியாசத்தில் அவரது வீட்டை விட அந்த அறிஞரின் நகருக்கு அருகில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அப்போது இவ்வாறு கட்டளை இடப்பட்டது. அவரது தவ்பாவை நாம் ஏற்றுக் கொண்டு

அவரை மன்னித்து விட்டோம். நமது மன்னிப்பின் போர்வையை கொண்டு அவரை மூடி விடுங்கள்.

13) பின்னர் நாங்கள் மேலும் சென்றோம். ஒரு பாவியின் கணக்கு சமர்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கிராமன் காத்திபீன் (செயல்களை பதிவு செய்யும் மலக்குகள்) அல்லாஹ்விடம் இவ்வாறு கூறினர். இந்த மனிதன் பகல் வேளையில் பாவங்கள் செய்துவிட்டு இரவு வேளையில் அதற்காக அழுது கொண்டிருப்பான். அதற்காக பாவமன்னிப்புக் கோருவான். அல்லாஹ் அவனை மன்னிப்பான். இந்த எனது அடியான் பாவங்களை மன்னிக்கின்றவனும் தனது அடியார்களை தண்டிக்கின்றவனுமாகிய ஓர் இறைவன் தனக்கு இருக்கின்றான் என்று அறிந்துள்ளான். பின்னர் அல்லாஹ் கூறுவான் “மலக்குகளே! நீங்கள் சாட்சியாக இருங்கள். நான் இவரை மன்னித்து விட்டேன்.”



பிறகு சில நாட்கள் கழித்து மீண்டும் அவன் பகல் வேளையில் பாவங்கள் செய்துவிட்டு இரவு வேளையில் அதற்காக அழுது மன்றாடுவான். அதற்காக பாவமன்னிப்புக் கோருவான். அல்லாஹ் அவனை மன்னிப்பான். இந்த எனது அடியான் பாவங்களை மன்னிக்கின்றவனும் தனது அடியார்களை தண்டிக்கின்றவனுமாகிய ஓர் இறைவன் தனக்கு இருக்கின்றான் என்று அறிந்துள்ளான் என்று கூறி அல்லாஹ் கூறுவான் “மலக்குகளே! நீங்கள் சாட்சியாக இருங்கள். நான் இவரை மன்னித்து விட்டேன்.”

பின்னர் சில நாட்கள் கழித்து அதே போன்று அவன் பகல் வேளையில் பாவம் செய்வான். பின்னர் இரவில் தவ்பா செய்வான்; மன்னிப்புக் கேட்பான். அதற்கு அல்லாஹ் ஓர் இறைவன் தனக்கு இருக்கின்றான் என்று இவன் அறிந்துள்ளான் என்று கூறி, “மலக்குகளே! நீங்கள் சாட்சியாக இருங்கள். நான் இவரை மன்னித்து விட்டேன் என்று கூறுவான்.”

எனவே மலக்குகள் அவனைக் குறித்த தமது ரிப்போர்ட்டை சமர்ப்பித்துக் கூறினர். இந்த மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் இவ்வாறே பாவம் செய்து பின்னர் மன்னிப்பு கேட்டு வந்துள்ளான். எனவே இவன் விஷயத்தில் ஒரு முடிவு எடுப்பதற்கு எங்களுக்கு வழிகாட்டல் வேண்டும் என்று அல்லாஹ்விடம் அவர்கள் விண்ணப்பித்தனர்.

அப்போது அல்லாஹ் கூறினான்: “நான் மூன்று தடவைகளுக்கு பின்னர் இவ்வாறு கூறியிருந்தேன். அதாவது என்னுடைய அடியானை நான் மன்னித்து விட்டேன். அவர் என்ன விரும்புவாரோ அதை செய்யட்டும்.” எனது இந்த கட்டளை பதிவு செய்யப்படவில்லையா என்று அல்லாஹ் கேட்டான். எனவே ஆவணங்களில் தேடிப் பார்க்கப்பட்டது. அப்போது அந்த கட்டளையின் நகல் ஒன்று புகாரியிலும் முஸ்லிமிலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அந்த குற்றவாளி மன்னிக்கப்பட்டான்.

14) பிறகு நாங்கள் மேலும் சென்றோம். ஒரு பாவியின் வழக்கை கிராமன் காத்திபீன்கள் சமர்ப்பித்துக் கொண்டிருந்தனர். பல்வேறு பாவங்களுடன் இருந்த அந்த மனிதர் மீது மற்றொரு புகாரும் இருந்தது. அது என்னவெனில் அந்த மனிதன் ஒரு வஸிய்யத் செய்திருந்தான். அதில் அவன் தனது பிள்ளைகளிடம் அவன் இறந்த பின்னர் அவனது உடலை எரித்து, அதன் சாம்பலின் பாதியை காற்றிலும் பாதியை கடலிலும் வீசிவிடும்படி கூறியிருந்தான். இறைவன் தன்னை தண்டிக்க நேர்ந்தால் வேறு எவருக்கும் தரப்படாத தண்டனை தனக்கு தரப்படும் என்று பெரிதும் பயந்திருந்தான். சில காலம் கழித்து அவன் மரணித்தான். அவனது பிள்ளைகள் அவன் கூறியதை அப்படியே செய்திருந்தனர். இன்று இறுதி தீர்ப்பு நாளில் அவன் உயிர் கொடுக்கப்பட்டு கொண்டு வரப்பட்டிருந்தான். மலக்குகள் அவன் விஷயத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இறைவனிடம் கேட்டனர்.. அல்லாஹ் கூறினான்: அவன் ஏன் அவ்வாறு வஸிய்யத் செய்தான் என்று அவனிடம் கேளுங்கள். அவன் பதில் கூறினான்: “என் இறைவா! நான் என் வாழ்வில் எந்த நன்மையும் செய்யவில்லை. எனது வாழ்வை பாவத்திலேயே நான் கழித்தேன். எனவே நான் என்ன செய்தேனோ அது உன் மீதான பயத்தின் காரணமாகவே அவ்வாறு செய்தேன். நீ அந்த உண்மையை நன்கு அறிவாய்” என்று கூறினான். அப்போது அல்லாஹ் கூறினான்: இந்த மனிதன் உண்மையை கூறியுள்ளான். அவனது உள்ளத்தில்




என்னைப் பற்றி உண்மையிலே பயம் இருந்தது. இறையச்சம் இருந்தது. எனவே நான் அவனை மன்னிக்கின்றேன்.

15) ஒரு பக்கம் நான் பார்த்தேன். சுவர்க்கத்தை நோக்கி செல்லும் சாலையில் சிலர் மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தனர் .நான் அவர்களிடம் உங்களுக்கு மன்னிப்பு கிடைத்து விட்டதா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சி பொங்க கூறினர். நான் எவ்வாறு கிடைத்தது என்று கேட்டேன். அவர்களில் ஒருவர் கூறினார்: "நாங்கள் கஷ்டத்தில் இருப்பதைப் பார்த்த இறைவன், இந்த மக்களை சுவர்க்கத்திற்கு அனுப்புவேன் என்று நான் வாக்குறுதி தருகிறேன்" என்று கூறினான். அதன் அடிப்படையில் நாங்கள் மன்னிக்கப்பட்டோம் என்றார். எத்தகைய வாக்குறுதியை நீங்கள் பெற்றீர்கள் என கேட்டேன். அவர்கள் கூறினர் அல்லாஹ் தனது நபியின் மூலமாக இவ்வாறு எங்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தான். அதாவது, ஒருவருக்கு ஒரு மகள் இருந்து அவர் அவளை உயிருடன் புதைக்காமல், அவளை இழிவுபடுத்தாமல், அவரது மகளுக்கு எதிரில் அவரது மகன்களுக்கு முன்னுரிமை தராமல் இருந்தால் பின்னர் நான் அவரை சுவர்க்கத்திற்குள் அனுப்புவேன் என்பதுவே அந்த வாக்குறுதி. நாங்கள் அல்லாஹ்வின் கட்டளையைப் பின்பற்றி நடந்ததினால் இன்று அல்லாஹ் எங்கள் மீது தனது அருளைப் பொழிந்துள்ளான் என்று கூறினர்.

16) இதைப் போன்று மற்றொரு பெண்ணை நான் பார்த்தேன். அவளது இறைவணக்கமும், அவளது நோன்பும், அவளது ஸதகாவும் போதுமானதாக இல்லை. இருப்பினும் அவள் சுவர்க்கத்திற்கு அனுப்பப்பட்டாள். ஏனென்றால் அவள் தனது அண்டை வீட்டுக்காரர்களை ஒருபோதும் தனது நாவினால் காயப்படுத்தியதில்லை. அவர்கள் அவளைக் குறித்து மகிழ்ச்சியடைந்திருந்தனர்.

17) இவ்வாறு நானும் குஃப்ரானும் நடந்து கொண்டேயிருந்தோம். அப்போது ஷஹீதுகளின் ஒரு பெரும் கூட்டத்தைக் கண்டோம். அவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதிருந்தது. குஃப்ரான் என்னிடம் கூறினார்: இந்தக் கூட்டத்தில் சிலரே இறை வழியில் போரிடும்போது வாளினால் ஷஹீதாக்கப் -பட்டவர்கள். ஆனால் அல்லாஹ்வின் கருணையும் மன்னிப்பும் ஷஹாதத்தின் தகுதியை அடைவதற்கு ஏராளமான வழிகளை நியமித்துள்ளது. உதாரணமாக, "ஒருவர் இறை வழியில் முயற்சி செய்தவாறு இருக்கும் நிலையில் அவர் இயற்கை மரணம் அடைந்தாலும் அவரும் ஷஹீதே ஆவார். ஒருவர் அவரது உடைமைகளை பாதுகாக்கும் போது மரணித்துவிட்டால் அவரும் ஷஹீதே ஆவார். ஒருவர் பிளேக் போன்ற கொள்ளை நோயில் மரணித்தால் அவரும் ஷஹீதே ஆவார். பிரசவத்தின்போது ஒரு பெண் மரணித்தால் அவளும் ஷஹீதே ஆவாள். நுரையீரல் நோயினால் மரணித்தவரும் ஷஹீது ஆவார். வயிற்றுப் போக்கினால் மரணித்தவரும் ஷஹீது ஆவார். ஒருவர் மீது ஏதேனும் விழுந்து அதன் காரணமாக அவர் மரணித்தால் அவரும் ஷஹீது ஆவார். எனவே அல்லாஹ் ஷஹீது ஆவதற்கு ஏராளமான வழிகளைத் திறந்து தந்துள்ளான். இவ்வாறு அவனது கருணையின் பக்கமும் மன்னிப்பின் பக்கமும் செல்வதற்கு அவன் எவ்வளவு வழிகளை வைத்துள்ளான் என்றால் ஒருவர் அதற்காக வாழ்நாள் முழுவதும் நன்றி சொன்னாலும் அது போதாது. ஒருவர் ஷஹாதத்தை வேண்டியவராக அதற்காக தொடர்ந்து தொழுகைகளில் துஆ செய்து வந்து இறுதியில் அவர் தனது படுக்கையில் மரணமடைந்தாலும் அவரும் ஷஹீதாக கருதப்படுவார்.

இவ்வாறு நாங்கள் அந்த ஷஹீதுகளின் பெருங்கூட்டத்தைக் கடந்தவாறு மேலும் முன்னோக்கிச் சென்றோம். இன்னும் பல காட்சிகளை நாங்கள் கண்டோம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)

# ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை 2



மவ்லவி S. அப்துல் காதிர்

அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு என்னென்ன சிறப்புகளையும் மேன்மைகளையும் வழங்கியிருக்கிறான் என்பதை எண்ணிப் பார்ப்பது மனித சக்திக்குட்பட்ட காரியமல்ல. அவர்களின் பௌதீக இருப்பின் காலகட்டத்தில் சில வருடங்களிலேயே மனித குலத்தின் ஒரு மிகப்பெரிய பழமையான சமூகமான அரேபிய சமுதாயம் சீர்திருத்தமடைந்தது. இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன் இருந்த அவர்களின் நிலை மற்றும் அதற்குப் பின் அவர்களின் நிலையில் என்னென்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்று ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் புரிந்து கொள்ளலாம்.

அது போலவே அவர்களது ஆன்மீக இருப்பின் மூலம் இன்று வரை பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் படிப்படியாகத் தம்மை சீர்திருத்தி வருகின்றனர். மேலே குறிப்பிட்ட அதே ஒப்பீடு இங்கும் பொருந்தும். அதாவது, ஒருவர் தன் வாழ்வில் ஒழுக்க வழிமுறைகளை கடைபிடித்து நடக்கும் விஷயத்தில் தம்மை மிகவும் மோசமான, கீழ்த்தரமான, இழிவான நிலையில் இருப்பதை உணர்ந்து அதற்காக உள்ளபடியே மனம் வருந்தி தன்னை சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்ற உறுதி மனப்பான்மையுடன் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி, முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அல்லது அவர்களின் நல்லொழுக்க மேன்மைகளைக் குறித்து சரியாக தெரிந்து கொள்ளும் போது அவரிடம் பல நல்ல மாற்றங்கள் உருவாகவே செய்கின்றன.

இதை வைத்துப் பார்க்கையில் இனி வரும் காலங்களிலும், இன்னும் சொல்வதென்றால் உலகம் உள்ள வரை ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஆன்மீக இருப்பின் மூலம் மனித குலம் பயனடைந்து கொண்டுதான் இருக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது. எனவே முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் மேன்மை மற்றும் சிறப்புகளையும் தெரிந்து கொள்வதும் அதிலிருந்து படிப்பினைகளைப் பெற்று வாழ்வில் தூய மாற்றங்களை ஏற்படுத்தி வெற்றி பெறுவதும் முஸ்லிம்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வாறே முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கிறது.

சிலை வணக்கம் மற்றும் ஏக இறைவனுக்கு இணை வைத்தல் போன்ற அறியாமை கால பழக்க வழக்கங்கள் மக்கள் மத்தியில் புரையோடிப் போயிருந்த அந்த இருள் மிகுந்த காலகட்டத்தில், மனித கற்பனைகளுக்கு எட்டியபடி எல்லாம் இறைவனை உருவகப்படுத்தி அந்த உருவங்களையே இறைவனாக வழிபட்டு வந்த மக்களிடையே உண்மையான இறைவனின் ஒருமைத் தன்மை மற்றும் அவனது பண்புகள் யாவும் ஈடிணையற்றவை என்ற உண்மையை எடுத்துரைத்து அவர்களுக்கு புரிய வைத்து இறைநேசர்களாக சீர்திருத்தம் செய்ய வேண்டிய கடமையை அவர்கள் நிறைவேற்ற வேண்டியதிருந்தது.

எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் உண்மையான ஏக இறைவனின் மீது அளப்பரிய அன்பும் பொய்க் கடவுள்கள் மீது வெறுப்பும் இருந்தது. இதன் அருளாக இறைவன் அவர்களை எல்லா விதமான ஷிர்க் எனும் இணைவைத்தலிலிருந்து சிறு வயது முதலே பாதுகாத்தான்.

குழந்தைப் பருவத்தில் ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரான அபூதாலிப் சிரியா பயணத்தில் அவர்களை தம்முடன் அழைத்துச் சென்றார்கள். அப்போது பஹீரா என்ற ஒரு கிறிஸ்தவ பாதிரியைச் சந்தித்தார்கள். அப்போது அவர் கேட்ட ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "என்னிடம் 'லாத்' மற்றும் 'உஸ்ஸா' போன்ற பொய்க் கடவுள்களைப் பற்றி எதுவும் கேட்காதீர்கள். இறைவன் மீது ஆணையாக! இவற்றை விட அதிகமாக என் உள்ளத்தில் வேறெதற்காகவும் வெறுப்பு இல்லை" என்றார்கள்.



இறைவனை வணங்குவதில் அவர்களுக்கு அளவற்ற பிரியம் இருந்தது. தன்னைப் படைத்த இறைவனை தனிமையில் இருந்து வணங்குவது அவர்களுக்கு குழந்தைப் பருவம் முதலே மிகவும் பிடித்த ஒன்றாக இருந்தது. அவர்களுக்கு இறைவனுடன் இருந்த அளவு கடந்த அன்பைப் பற்றி அரேபியர்கள் இவ்வாறு வர்ணித்தார்கள். ''அஷிக முஹம்மதன் ரப்பஹூ – முஹம்மது தன் இறைவனின் காதலராகி விட்டார்'' என்றனர். இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கவிதை வரியல்ல. மாறாக, அவர்களின் தொழுகை, இறை வழிபாடு மற்றும் அவர்கள் செய்து வந்த பிரார்த்தனை –களும் இதனை உண்மைப்படுத்த போதுமான சான்றுகளாகும்.

ஏகத்துவத்தின் மீது அவர்களுக்கு இருந்த அதீத அன்பை அவர்கள் தொழுகையில் இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்; தொழுகையின் தொடக்கத்திலேயே அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்:

وَجَّهْتُ وَجْهِىَ لِلَّذِىْ فَطَرَ السَّمٰوٰتِ وَ الْاَرْضَ
حَنِيْفًا وَّ مَآ اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ

நிச்சயமாக நான் வானங்களையும் பூமியையும் படைத்த அவன் பக்கம் குனிந்தவனாக என் கவனத்தை திருப்பி விட்டேன். நான் இணை வைப்பவர்களைச் சேர்ந்தவன் அல்லன். **(6:80)**

இவ்விடத்தில் சூரியன், சந்திரன், கல், மரம், விலங்குகள், பறவைகள் போன்றவற்றை வணங்குவதை மட்டும் இறைவனுக்கு இணைவைப்பதாகும் என்று கூறவில்லை. மாறாக, இணைவைத்தலின் எல்லா வகையையும் இதில் உட்படுத்தி அதிலிருந்தும் தவிர்ந்திருக்க வலியுறுத்தியுள்ளார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், பொய் பேசுதல், பிறர் பார்ப்பதற்காக ஒன்றை பகட்டாக செய்தல் போன்ற செயல்களையும் இணைவைப்பதற்கு நிகரான தீமைகள் என்று கூறி அவற்றிலிருந்தும் தடுத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அறிவித்தார்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்குப் பிறகு தங்கள் சமுதாயம் இணைவைக்குமா?'' என்று கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''ஆம்! என் சமுதாயம், சூரியன், சந்திரன், கல் மற்றும் சிலைகளை வணங்கா விட்டாலும், அவர்கள் தம் செயல்களில் வெளிக்காட்டுதலை மேற்கொள்வார்கள்'' என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது)

ஆகவே, இறைவனுக்கு இணைவைப்பது என்பது ஏதோ இறைவனை பாதிக்கக் கூடிய ஒரு செயல் என்று நாம் தவறாக எண்ணி விடக் கூடாது. உண்மையில் இதனால் இறைவனுக்கு எந்த பாதிப்போ அல்லது பாதகமோ இல்லை. மனிதனின் ஒழுக்கங்கள் சீரழிந்து விடும் அளவுக்கு இணைவைத்தல் ஒரு வெறுக்கத்தக்க தீமை என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கங்கள் மக்களுக்கு காட்ட வேண்டும் என்று பகட்டுக்காகவோ அல்லது பெருமைக்காகவோ ஒருபோதும் இருந்ததில்லை. மக்களுடன் சேர்ந்து தொழும்போது கூட அவர்களின் தொழுகையில் ஈடுபடும் அழகும் அதன் உச்சத்தை எட்டி இருந்ததை காணலாம். இந்நிலையில் அவர்கள் தனிமையில் தம் அன்பான இறைவனை எப்படி எல்லாம் புகழ்ந்து மன்றாடி வணங்கி மகிழ்ந்திருப்பார்கள் என்பதை நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அவர்களின் வணக்கங்களையும் தியாகங்களையும் இறைவன் அங்கீகரித்த விதமே நம்மை பிரமிக்க வைக்கிறது.

அல்லாஹ் கூறுகின்றான்: நபியே! நீர் கூறுவீராக. என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு இணையே இல்லை. இவ்வாறே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பட்டு நடப்பவர்களில் நானே முதல்வன். **(6:163 மற்றும் 164)**

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் இறை வணக்கங்கள் இறைவனால் அழகிய முறையில் ஏற்றுக்


*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)*

# 'இஸ்முஹு அஹ்மது' என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!


**இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்**
**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)**


3


**தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்**

இவ்விடத்தில் சிலர் இவ்வாறும் கேள்வி எழுப்பலாம் அதாவது மேலே கூறப்பட்டுள்ளதிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் முஹம்மது என்பது கூட இல்லை என்பது தெரிய வருகிறதே! ஏனென்றால் முஹம்மது கூட இந்த ஹதீஸில் இரண்டாவது பண்புடன் சேர்ந்து வந்துள்ளது. இதற்குரிய பதில் என்னவென்றால், இந்த ஹதீஸில் முஹம்மது என்பது பண்பின் அடிப்படையிலே வந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆம், திருக்குர்ஆன் மற்றும் மற்ற ஹதீஸ்களிலிருந்து அன்னாரின் பெயர் முஹம்மது என்று இருந்தது என்பது தெரிய வருகிறது. இந்த ஹதீஸில் அனைத்தும் பண்புகளை பற்றியே கூறப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரம் என்னவென்றால், இந்த ஹதீஸில் எனது பெயர் இன்னென்ன என்பதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நி.:மத் (அருள்) என்ற அடிப்படையில் கூறியுள்ளார்கள். இப்போது தெளிவான விஷயம் என்னவென்றால், பெயர் இருப்பது பாராட்டுக்குரிய ஒரு விஷயமல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை போன்ற மனிதர் தமது பெயரிலா பெருமைப்படுவார்!? நவூதுபில்லாஹி மின் தாலிக். இவ்விடத்தில் அன்னார் (ஸல்) தமது குணங்களை குறித்தே கூறியுள்ளார்கள். மேலும் இறைவனின் தயவை குறிப்பிட்டுள்ளார்கள் அதாவது அவன் என்னை முஹம்மதாக ஆக்கி இருக்கின்றான். அஹ்மதாக ஆக்கி இருக்கின்றான். மற்றும் பல அழகிய குணங்களை கொண்டு சிறப்பித்துள்ளான். இவ்வாறே முஹம்மது என்பதும் இவ்விடத்தில் பெயர் அல்லாமல், குணம் என்ற அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அன்னார் இதில் கூறுவதாவது, முஹம்மது என்பது எனது பெயர் மட்டுமல்ல. மாறாக அல்லாஹ்வின் அருளினால் எனது பணிகள் மற்றும் நன்னடத்தைகளின் அடிப்படையிலும் நான் முஹம்மது ஆக இருக்கின்றேன். இதனை இறைவன் புகழ்ந்துள்ளான். மலக்குமார்கள் தூய்மையை எடுத்துரைத்துள்ளார்கள். நான் அனைவரையும் விட இறைவனை அதிகம் புகழ்பவன் ஆவேன். நான் உலகத்திலிருந்து கு.:ப்ர் மற்றும் வழிகேட்டினை அகற்றுபவன் ஆவேன். எனது வழியில் மக்கள் எழுப்பப்படுவார்கள். மேலும் நான் ஷரீஅத்தை கொண்டு வந்த நபிமார்களில் இறுதியானவன் ஆவேன்.

இந்த ஹதீஸில் அதாவது நான் முஹம்மது ஆவேன், அஹ்மது ஆவேன் என்று மட்டும் வந்துள்ளது என்றால், பிறகு இது அன்னாரின் பெயர்தான் அல்லாமல் குணங்கள் கிடையாது என்று கூற வாய்ப்பிருக்கிறது. ஆனால், இதனுடன் மாஹி, ஹாஷிர், ஆகிப் என்பதும் வந்துவிட்டது. ஆகவே, இவை யாவும் அன்னாரின் குணங்களே அல்லாமல் பெயர் இல்லை என்பது தெரிகிறது. ஆகவே இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது என்று வந்துள்ளது என்ற பைஅத் செய்யாத (கைர் முபாயீன்) மக்களின் இந்த ஆதாரம் தவறு என்றாகிவிட்டது. நஊதுபில்லாஹ் முஹம்மது என்ற பெயரில் அன்னார் பெருமை கொண்டிருந்தால் பிறகு இவ்வாறான பெயரை கொண்ட பலர் இவ்வுலகத்தில் இருக்கின்றனரே! அவர்கள் அனைவரும் தனது பெயரில் பெருமை கொள்ள முடியுமா என்ன? இல்லை என்று சொன்னால் பிறகு ஏன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அவமதிப்பை பெற்றுத் தரும் பொருளை இந்த ஹதீஸிற்கு கொடுக்கின்றீர்கள்? மேலும் நஊதுபில்லாஹ் அன்னார் தனது பெயரில் பெருமை கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டும் எழும்புகின்றதே! இவ்வாறான செயலை ஒரு சாதாரண மனிதன் கூட செய்ய மாட்டான். ஆனால் இறைவனின் நபி மற்றும் அனைத்து நபிமார்களுக்கு தலைவர் இவ்வாறு

கூறுவார்களா!? எங்களை எதிர்ப்பதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தாக்குதலை தொடங்கிவிட்டனர் என்பதை எமது எதிரிகள் சற்று சிந்திக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முஹம்மது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அஹ்மது ஆவேன். அன்னாருக்கும் இந்த பெயர்கள் இருந்தன என்று பொருளா!? அஹ்மது என்ற பெயர் குறித்து கருத்து வேறுபாடு காணப்பட்டாலும், கண்டிப்பாக அன்னாரின் பெயர் முஹம்மதாக இருந்ததில்லை. பிறகு இதற்கு, என்னுள் முஹம்மதிய்யத் குணம் இருக்கின்றது என்ற பொருள் இல்லையா!? இந்த விஷயம்தான் பெருமைக்குரியதாக இருக்க முடியும். முஹம்மது என்ற பெயர் மட்டும் எவ்வாறு அன்னாருக்கு பெருமைக்குரியதாக இருக்க முடியும்? இங்கு ஏமாற்றம் ஏற்படுவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முஹம்மது என்ற பெயர் கூட இருந்ததில்லை.

நமது எதிரிகள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாயாருக்கு அன்னாரின் பெயர் அஹ்மது ஆகும் என்று அறிவிக்கப்பட்டது, என்ற ஹதீஸையும் எடுத்து வைக்கின்றனர். ஆனால் இந்த ஹதீஸ் பொய்யானதாகும். ஏனென்றால் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் பல்லாயிரக்கணக்கான பொய்யான ஹதீஸ்களை பதிவு செய்துள்ளார். அவர் தானே முன் வந்து, நான் பொய்யான ஹதீஸ்களையும் பதிவு செய்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

அதே நேரம் சஹீஹ் ஆன அறிவுப்புகளில் அன்னாரின் தாயாருக்கு அன்னார் பெயர் முஹம்மது என்று அறிவிக்கப்பட்டதாக வந்துள்ளது. இப்னு ஹிஷாம் என்ற நூலின் பக்கம் 62 -இல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது, அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்: எனக்கு கனவில் இக்குழந்தை பிறந்த பிறகு ‘சம்மீஹி முஹம்மதன்’ (இப்னு ஹிஷாம் பாகம் 1 பக்கம் 62) அக்குழந்தைக்கு முஹம்மது என்று பெயர் வைப்பாயாக என்று கூறப்பட்டது. இதே போன்று மாவாஹிபுல் லதுன்யஹ் -விலும் பார்க்கவும். உண்மை இவ்வாறு இருக்கும்போது நாம் எவ்வாறு ஒரு பொய்யரின் ஹதீஸை ஏற்றுக் கொள்ள முடியும்? இந்த ஹதீஸை மக்களின் எவரோ ஒருவர் தனது அறிவுக்கேற்ப உருவாக்கி, திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிற்கான எந்த ஆதாரமும் இல்லாமல் ‘இஸ்முஹு அஹ்மது’ என்பதை நபி (ஸல்) அவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். பிறகு இதற்கான ‘சனது’ (அறிவிப்பாளர்கள் பட்டியல்) என்ன? எனும் விஷயத்தில் கடினம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இவர் ஒரு அறிவிப்பை இட்டுக் கட்டியுள்ளார். இல்லை என்று சொன்னால் பிறகு ஏன் இவ்வாறான முக்கியமான செய்தி சஹீஹான ஹதீஸ்களில் பதிவு செய்யப்படவில்லை? முஹத்திஸ்களின் பார்வையில் இந்த ஹதீஸின் அறிவிப்பாளரும் இவரைப் போன்ற இன்னும் பலரும் பொய்யர் ஆகவும், நம்பகத்தன்மையற்றவராகவும் ஏன் உள்ளனர்?

ஆக, எந்நிலையிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது ஆகும் என்பது நிரூபணமாக -வில்லை. ஆகவே இப்போது இரண்டே வழிகள் எஞ்சி விடுகின்றன. ஒன்று அஹ்மது என்ற பெயரைக் கொண்ட முன்னறிவிப்பு வேறொருவரை குறித்ததாகும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது ‘இஸ்முஹு அஹ்மது’ என்றால் அவரின் பெயர் அஹ்மது ஆகும் என்பதல்ல. மாறாக அவரின் குணம் அஹ்மதாக இருக்கும் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குணம் அஹ்மதாக இருந்தது. ஆகவே இந்த முன்னறிவிப்பை இந்த அடிப்படையில் ஒப்பிட வேண்டும். ஆனால் இந்த முறையும் பயன் உள்ளதாக இருக்காது. ஏனென்றால் அஹ்மது என்ற பெயரை கொண்ட இவர் அல்லது இக்குணத்தை கொண்டவரை குறித்து இந்த சூராவில் எந்த அடையாளங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவை யாவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் காணப்படவில்லை. இதனை குறித்து தற்போது கூறப்படும். ஆகவே ஒரேயொரு நிலைதான் தற்போது எஞ்சுகிறது. அதாவது அஹ்மது என்ற இந்த பெயர் அல்லது குணத்தை கொண்ட நபி (எவ்வாறு இருந்த போதிலும்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு அன்னாரின் தொண்டரை சார்ந்தவராக இருப்பார். மேலும் எங்களது வாதம்



வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) தமது தோழர்களுடன்.
அவர்களின் வலப்பக்கத்தில் இளம் வயது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

என்னவென்றால், இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள தூதர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள்.

சிலர் அஹ்மது என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சொந்த பெயராக இருந்தது என்பதற்கு மற்றொரு ஆதாரத்தையும் எடுத்து வைக்கின்றனர். அதாவது இவ்வசனத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான்: “அந்த தூதர் ய.்.த்தீ மிம் ப.்.தி எனக்கு பிறகு வருவார்.” ஆகவே இந்த முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு பிறகு முதலில் வந்தவரே இதற்குரியவர் ஆவார். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே வருகை தந்தார்கள். அதுவன்றி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்ல. அன்னாரோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு அல்லவா வந்தார்கள். ஆகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தவிர்த்து வேறொருவர் எப்படி அஹ்மத் ஆக முடியும்?

இதற்கான பதில் என்னவென்றால், இவ்வாறு ஆட்சேபனை செய்பவர்கள் அரபி மொழியை அறியாததனால் இவ்வாறான ஆட்சேபனையை செய்கின்றனர். ஏனென்றால், ‘ப.்.த’ என்பது ‘பிறகு’ என்ற பொருளில் வருமே அல்லாமல் ‘உடனே பிறகு’ என்ற பொருளில் வருவதில்லை என்பதை அறியாதவர்களாக இருக்கின்றனர். ஒரு பொருள் ஒன்றுக்கு பிறகு அது பத்து பொருட்களை தாண்டி இருந்தாலும் அல்லது அதற்கு அடுத்ததாக இருந்தாலும் அது ‘பிறகு’ (அல்லது பின்பு) என்றே கூறப்படும். அரபி மொழியில் காலத்தை எடுத்து கூறக்கூடிய சொற்கள் மூன்றே உள்ளன. ஒன்று ‘கப்ல்’ அதாவது ‘முன்பு’, இரண்டாவது ‘.்.பீ ஸமானிஹி’ அதாவது அது இருக்கும் காலத்தில், மூன்றாவது ‘ப.்.த’ அதாவது ‘பின்பு’ ஆகும். இந்த மூன்று சொற்களே அனைத்து மொழிகளிலும் உள்ளன. பிறகு இந்த மூன்று சொற்களில் எந்த சொல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹை குறித்து கூறப்பட்டுள்ளது என்பதை பார்க்க வேண்டும். ‘கப்ல்’ என்ற சொல் அன்னாரை குறித்து கூற முடியுமா? அன்னார் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு முன்பு வந்தவர்களா? இல்லை என்றால் பிறகு தற்காலம் என்ற சொல்லை கூறமுடியுமா? அன்னார் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்திலா இருந்தார்கள்? இதுவும் இல்லை என்று சொன்னால் பிறகு எந்த சொல் அன்னாரை குறித்து கூறப்பட வேண்டும்? அது ‘ப.்.த’ என்ற சொல் மட்டும்தானே? பிறகு ‘ப.்.த’ என்ற சொல்லை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள் என்றால் பிறகு இதில் என்ன பிரச்சனை உள்ளது. இதை தவிர்த்து அவர்கள் வேறு எந்த சொல்லை பயன்படுத்தி இருக்க வேண்டும்? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலை அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு முன்பு வந்தார்கள் என்று சொன்னால் அல்லது அவர்களின் காலத்திலே



இருந்தார்கள் என்று சொன்னால் பிறகு ‘ப.்.த’ என்ற சொல் அன்னாருக்கு (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு) எதிராக வாதிக்கக்கூடும். ஆனால் அன்னாரோ பிறகு தோன்றி இருக்கும்போது பிறகு இதில் ஆட்சேபனை செய்வதற்கு என்ன இருக்கிறது? ஹஸ்ரத் ஈஸா அலை அவர்கள், “அந்த ரஸூல் தனக்கு பிறகு வருவார்கள்” என்று சொன்னார்கள். இதிலிருந்து (முன்னறிவிக்கப்பட்ட) அவர் அன்னாரின் காலத்தில் வரமாட்டார். மாறாக அன்னாரின் (ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின்) வ.்.பாத்திற்கு பிறகே வருவார் என்ற முடிவுக்கு மட்டுமே வர முடியும். அவர் உடனே பிறகு வருவார் என்ற முடிவுக்கு ஒருபோதும் வர முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கூட எங்கு உடனே பிறகு வந்தார்கள்? அன்னாரோ 600 வருடத்திற்கு பிறகே வருகை தந்தார்கள். அல்லது தூதர் என்ற அடிப்படையில் அவர் உடனே பிறகு தோன்றுவார்கள் என்ற நிபந்தனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே பொருந்துகிறது என்று கூறுவதாக இருந்தால் பிறகு தூதர்

என்ற அடிப்படையில் அல்ல. மாறாக அஹ்மது என்ற அடிப்படையிலே உடனே பிறகு என்று கூறப்பட்டுள்ளது என வாதிக்க எங்களுக்கும் உரிமை இருக்கிறது என்று நான் கூறுவேன். அதாவது எந்த தூதரை குறித்து நான் முன்னறிவிப்பு செய்கிறேனோ அது அஹ்மது என்ற பெயரின் அடிப்படையில் முதலாவதாக இருப்பார். ஆக, எந்த தூதரின் பெயர் அஹ்மது என்று நிரூபணம் ஆகி விடுமோ அவரை குறித்தே இந்த முன்னறிவிப்பு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆக, நிபந்தனையை நீங்கள் அதிகரிப்பதாக இருந்தால் பிறகு மற்ற பிரிவினருக்கும் நிபந்தனையை இன்னும் எடுத்து கூறுவதற்கு உரிமை உண்டு. அரபி அகராதி அடிப்படையில் நாம் முடிவு எடுப்பதாக இருந்தாலும் கூட எமது கருத்தை நிராகரிப்பதற்கு எதிரிகளுக்கு எந்த காரணமும் இல்லை.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ப.்.த என்ற சொல்லை உபயோகித்துள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்கு (ஹஸ்ரத் ஈஸா அலை அவர்களுக்கு) பிறகே வந்துள்ளார்கள். அல்லாமல் அவர்களுக்கு முன்போ அல்லது அவர்களின் காலத்திலோ அல்ல.

இப்போது நான் இந்த முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள் என்பதை நிரூபிக்க திருக்குர்ஆனிலிருந்து ஆதாரத்தை எடுத்து வைக்கிறேன்.

முதல் ஆதாரம்: அன்னாரின் பெயர் அஹ்மது என்று இருந்தது. இதுவே இம்முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் அன்னாரே என்பதற்கான முதல் ஆதாரம் ஆகும். அன்னாரின் பெயர் அஹ்மதே என்பதற்கான ஆதாரம் கீழே உள்ளது.

***ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் அஹ்மது என்பதற்கான முதல் ஆதாரம்:*** முதலாவது விஷயம் என்னவென்றால், அன்னாரின் பெயர் அஹ்மது என்று அன்னாரின் பெற்றோர்கள் வைத்தார்கள். அதற்கான ஆதாரம் என்னவென்றால், அன்னாரின் தந்தை அன்னாரின் பெயரில் ஓர் ஊரை உருவாக்கினார்கள். அதற்கு அஹ்மதாபாத் என்று பெயர் வைக்கப்பட்டது. அன்னாரின் பெயர் குலாம் அஹ்மது என்று வைத்திருந்தால், இந்த ஊரின் பெயரை குலாம் அஹ்மதாபாத் என்று வைத்திருக்க வேண்டும். இதே போன்று அன்னாரின் சகோதரன் பெயரிலும் ஓர் ஊரை உருவாக்கினார்கள். அதற்கு காதிராபாத் என்று பெயர் சூட்டப்பட்டாலும் அவரை குலாம் காதிர் என்றே அழைத்தனர். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் அவர்களின் பெயரும் காதிர் என்று இருந்தது. இரு சகோதரர்களின் பெயருக்கு முன்பு குலாம் என்று இருந்தது. அது இந்தியாவின் பழக்க வழக்கத்தின் அடிப்படையில் மிகைப்படுத்தப்பட்டது. இந்தியாவில் மக்கள் ஒரு பெயரோடு மற்றுமொரு பெயரை வைக்கும் பழக்கம் இருந்து வருகின்றது என்றாலும் அந்த புனைப்பெயருக்கு எந்த பொருளும் அர்த்தமும் இருப்பதில்லை. உதாரணத்திற்கு சிலரின் பெயர் முஹம்மது அஹ்மது ஆகும். முஹம்மது அலி என்றும் பெயர் வைக்கின்றனர். எனும்போதிலும் இந்த பெயருக்கு ஒரு பொருள் கிடையாது. முஹம்மது தனிப்பெயர் ஆகும். மேலும் அஹ்மது அல்லது அலி ஒவ்வொன்றும் தனித்தனி பெயர் ஆகும். இவ்விரண்டும் இணைவதால் ஓர் புதிய பலன் ஒன்றும் கிடைத்து விடுவதில்லை. பெயர் மட்டுமே நீண்டதாக அமைந்து விடும். இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டே இவ்வாறான சொற்கள் அதிகப்படுத்தப்படுகிறது. இல்லை என்றால் இவ்விரு பெயர்களிலும் ஒரு பெயர் மட்டுமே அசல் பெயராக இருக்கிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் குடும்பத்திலும் குலாம் என்ற சொல்லை அனைத்து பெயர்களுக்கு முன்பு அதிகப்படுத்தப்பட்டது. அன்னாரின் தந்தை பெயர் குலாம் முர்தஸா என்று இருந்தது. சித்தப்பாவின் பெயர் குலாம் ஹைதர், குலாம் முஹ்யுத்தீன் என்றிருந்தது. இவ்வாறே அன்னாரின் பெயருடன் குலாம் என்பது இணைக்கப்பட்டது. இல்லை என்றால் அன்னாரின் பெயர் அஹ்மது என்பதாக மட்டுமே இருந்தது. அன்னாரின் பெயரில் குலாம் அஹ்மதாபாத் என்று பெயர் வைக்காமல் அஹ்மதாபாத் என்று ஓர் ஊருக்கு பெயர் வைத்திருப்பது அன்னாரின் தந்தையின் சாட்சியாக இருக்கிறது.

குலாம் அஹ்மது என்பது ஒரு பெயரே என்று ஏற்றால், இது எந்த மொழியிலுமுள்ள பெயரும் கிடையாது. அரபி மொழியில் இந்த பெயர் 'குலாமு அஹ்மத்' என்று வர வேண்டும். ஆனால் இது அன்னாரின் பெயராக இருந்ததில்லை. பாரசீக மொழியை எடுத்துக் கொண்டாலும் 'குலாமே அஹ்மது' என்று வர வேண்டும். ஆனால் அன்னாரின் பெயர் இவ்வாறும் இல்லை. ஏனென்றால் அன்னாரின் பெயரில் 'மீம்' -இன் மீது 'ஜஸ்ம்' இருக்கிறதே அல்லாமல் 'ஸேர்' இல்லை. மேலும் உருது அல்லது பஞ்சாபி மொழியில் பார்த்தோம் என்றால் 'அஹ்மத் கா குலாம்' அல்லது 'அஹ்மத் தா குலாம்' என்று வர வேண்டும். ஆனால் இவ்வாறும் இல்லை. அப்படியிருக்கும்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை நோக்கி கூறப்படும் அந்த பெயர் எந்த மொழியை சார்ந்ததாக இருக்க முடியும்? ஆகவே உண்மை என்னவென்றால், அன்னாரின் பெயர் அஹ்மதாக இருந்தது. குலாம் என்பது ஒரு குடும்ப சின்னமாக அதிகப்படுத்தப்பட்ட ஒன்று மட்டுமே ஆகும்.

***இரண்டாவது ஆதாரம்:*** அன்னாரின் பெயர் அஹ்மது ஆகும் என்பதற்கு இரண்டாவது ஆதாரம் என்னவென்றால், அன்னார் தனது அனைத்து, மகன்களின் பெயருடன் அஹ்மதை இணைத்துள்ளார்கள். இது அன்னார் தனது பெயரை அஹ்மதாகவே அறிந்திருந்தார்கள் என்பதற்கான ஆதாரம் ஆகும். ஆகவேதான் ஒரு சின்னமாக அனைத்து பையன்களின் பெயருக்கு பிறகு அஹ்மத் என்ற பெயரை

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

*(10 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆனால் இன்று எனக்கு தங்களது மார்க்கம் அனைத்தையும் விட பிரியமானதாகும். இறைவன் மீது ஆணையாக! தங்களது நகரத்தை விட வேறெந்த நகரமும் வெறுக்கத்தக்கதாக இருந்ததில்லை. ஆனால் இன்று இது எல்லா நகரங்களை விடவும் பிரியமானதாகும் என்று கூறினார்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருமுறை ஒரு மனிதன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை திட்டினான். அப்போது ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் அங்கிருந்தார்கள். அன்னார் வியப்புடன் புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள். அம்மனிதன் மேலும் வசைமாரி பொழிய ஆரம்பித்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது கோபம் அடைந்து அங்கிருந்து சென்று விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாருக்கு பின்னாலேயே சென்று ஹுஸுர் அவர்களிடம், அவன் என்னை திட்டிய போது தாங்கள் அங்கேயே இருந்தீர்கள். நான் அவனது வசைமொழிக்கு பதில் கூறிய போது தாங்கள் கோபமுற்று வந்து விட்டீர்களே என்று கேட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கான மஅக மலகுன் யருத்து அலைஹி ∴பலம்மா ரதத்த அலைஹி வகஅஷ்ஷைத்தானு (மிஷ்காத் கிதாபுல் ஆதாப். பாபுர் ரி∴ப்க்) அபூபக்ரே! அவன் திட்டிய போது அமைதியாக இருந்த சமயம் வானவர் அவனுக்கு பதில் கூறிக் கொண்டிருந்தார். ஆனால் தாங்கள் பதில் கூற ஆரம்பித்ததும் ஷய்த்தான் வந்து விட்டான். அதனால் தான் நான் அங்கிருந்து வந்து விட்டேன் என்றார்கள்.

கண்ணியமிக்கோரே! மேற்கூறப்பட்ட சம்பவத்தில் இன்றைய முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் படிப்பினை உள்ளது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது புகழை சீர்குலைக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வின் மலக்குமார்கள் பதில் கொடுக்கின்றனர் என்று அவர்கள் நம்ப வேண்டும். ஏனென்றால் வல்லாஹு ய∴ஸிமுக மினன்னாஸ் (5:68) அல்லாஹ் அன்னாரை மக்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக வைக்கிறான் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். ஆனால் அறியாத முஸ்லிம் ஒருவன் தகாத முறையில் அத்தீயவர்களுக்கு பதில் கொடுக்க முயற்சித்தால் ஷய்த்தான் தலையிட்டு இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த முயற்சிக்கிறான். இதனாலேயே ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இப்படிப்பட்ட முஸ்லிம்களுக்கு புரிய வைத்தவாறு கூறினார்கள்:

இவ்வாறு செய்பவர்களுக்கு புரிய வையுங்கள். நபி (ஸல்) அவர்களின் மேன்மையினை எடுத்துரையுங்கள் என்ற நடைமுறையைத்தான் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கற்பித்தார்கள். உலகிற்கு அதன் பார்வையிலிருந்து மறைந்த அந்த அழகினையும் ஒளிமிக்க பண்புகளையும் தெரியப்படுத்துங்கள். மேலும் அல்லாஹ் அவர்களை அவர்களது செயல்களிலிருந்து விலக்கி வைப்பானாக! அல்லது தானே அவர்களைப் பிடிப்பானாக! என்று அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தன் வழிமுறைப்படி அவர்களைப் பிடிப்பான். அவன் யாரை எவ்வகையில் பிடிக்க வேண்டும் என்று நன்கு அறிந்தவனாக உள்ளான். (ஜுமுஆ பேருரை பிப்ரவரி 10, 2006)

*(18-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொள்ளப்பட்டதற்கான அங்கீகாரமாக இந்த வசனங்கள் விளங்குகின்றன. ஆகவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் அன்பிற்குரிய தலைவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் குறித்து 'முழுமையான மனிதர்' என்று கூறியது ஒரு மிகைப்படுத்தப்பட்ட வாக்கியமல்ல. மாறாக, அது முற்றிலும் உண்மையே. மேலும் இதனை வெளிப்படையாக எடுத்துரைப்பது அவர்களின் உரிமை. இதனை இக்காலத்தில் மறைத்து வைத்தால் அது அவர்களின் கண்ணியத்திற்கு நாம் இழைக்கும் அநீதி என்பதையும் நாம் இங்கு சொல்லியாக வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமைத் தன்மை குறித்து அவர்களின் உண்மையான நேசர், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"எல்லா நபிமார்களை விடவும் முழுமையான போதனைகளை அளித்தவர், தூய்மையில் மிக உயர்ந்தவர், தத்துவமிக்க போதனைகளை அளித்தவர், மனித முழுமைகளின் உயர்வான முன்மாதிரியை தம் வாழ்வின் மூலம் காட்டித் தந்தவர் நம் தலைவரும், நம் எஜமானருமாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது." (அர்பயீன் எண்.1 ரூஹானி கஸாயீன் தொகுதி 17 பக்கம் 345)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிக அருளை உலகில் பரப்புபவர் இதற்கு முன் யாரும் பிறந்ததில்லை. இனி பிறக்கப்போவதுமில்லை. அவர்களின் அழகிய முன்மாதிரி என்றென்றும் நிலை பெற்றிருக்கும். அதனைப் பின்பற்றி நடப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் முயற்சி செய்ய வேண்டும். இந்த வகையில் பெரும் பொறுப்பு அஹ்மதிகளுக்கு இருக்கிறது. இந்த பொறுப்பானது இப்போது நம் மீதே சுமத்தப்பட்டுள்ளது...."

நாம் இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பு, நேசம், கருணை ஆகியவற்றின் அழகிய முன்மாதிரியை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும். அவ்வாறு காட்டுவதற்கு முஸ்லிம்கள் தமது நடத்தைகளை மாற்ற வேண்டியது அவசியம் என்பது வெளிப்படையே." (ஜுமுஆ பேருரை 10.02.2006)

(தொடரும்....)

*(22 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி…)*

இணைத்துள்ளார்கள். இல்லை என்றால், அஹ்மது என்ற பெயரை இணைப்பதினால் பொருள் அடிப்படையில் எந்தவொரு இலாபமும் கிடைக்கவில்லை. பிறகு அஹ்மது என்ற பெயரை அதிகப்படுத்துவதில் என்ன பலன்தான் இருந்தது? ஆகவே, அஹ்மது என்பது ஹஸ்ரத் சாஹிபின் பெயராக இருந்தது அதனை குடும்பத்தின் ஓர் அடையாளச் சின்னமாக ஒவ்வொரு பையன் பெயருடன் சேர்க்கப்பட்டது என்பது தெள்ளத் தெளிவானதொன்றாகும்.

**மூன்றாவது ஆதாரம்:** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பெயர் அஹ்மது என்பதற்கு மூன்றாவது ஆதாரம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) தனது எப்பெயரைக் கொண்டு பைஅத் வாங்கினார்களோ அது அஹ்மதாகவே இருந்தது. அன்னார் எப்போதும் குலாம் அஹ்மது என்று கூறி பைஅத் வாங்கியதில்லை. ஆகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தவர்கள் பலர் உங்களில் இருப்பீர்கள். அவர்கள் அனைவரும், "இன்று நான் அஹ்மதின் கையில் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகிறேன்" என்று அன்னார் கூறி பைஅத் வாங்கினார்கள் என்பதற்கு சாட்சி வழங்க முடியும். ஆகவே நீங்கள் அனைவரும் அஹ்மதின் கையில் பைஅத் செய்தீர்களா? அல்லது குலாம் அஹ்மதின் கையில் செய்தீர்களா? என்பதை கூறுங்கள்!!? (நான்கு புறமிருந்தும் நாங்கள் அஹ்மதின் கையிலே பைஅத் செய்தோம் என்று உரத்த குரல் எழும்பியது) அன்னாரின் பெயர் குலாம் அஹ்மதாக இருந்திருந்தால், அன்னார் பைஅத் வாங்கும் சமயத்தில் "நான் இன்று குலாம் அஹ்மதின் கையில் பைஅத் செய்கிறேன் என்று கூறுங்கள்" என்று கூறியிருப்பார்கள். ஆனால் அன்னார் அவ்வாறு செய்யவில்லை. ஆகவே அன்னார் தனது பெயரை அஹ்மது என்றே வைத்திருந்தார்கள் என்பது நிரூபணமாகிறது. (தொடரும்....)


*(13 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி…)*

புரிந்திருந்தார். சிராக் பீபி அவர்கள் தயாள குணமும், பழகும் பண்பும், முகமலர்ச்சியும், நல்லிதயமும் கொண்ட மிகச்சிறந்த இறையச்சம் மிக்க பெண்மணியாகத் திகழ்ந்தார். அவர் ஏழைகள் உயிரோடு இருக்கும் பொழுது அவர்களை நன்கு பராமரித்தார்; அவர்கள் இறந்து விட்டால் அவர்களைக் கண்ணியமாக அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். வளமையிலும், வறுமையிலும் அவர் மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களுக்கு கட்டுப்பாடு மிக்க மனைவியாகவும், மிகச் சிறந்த துணைவியாகவும் விளங்கினார். மிர்ஸா குலாம் முர்தஸாவும் அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். அவரது எச்சரிக்கை உணர்வு, முடிவெடுக்கும் ஆற்றல், நற்பண்புகள் ஆகியவற்றின் காரணமாக எப்போதும் அவரது ஆலோசனையைப் பெற்று வந்தார்.

அவர் அன்பிற் சிறந்த தாயாகவும் விளங்கினார். அவர் தமது குழந்தைகளின் வளர்ப்பிலும், பராமரிப்பிலும் அதிகக் கவனம் செலுத்தினார். உலகியல் அக்கறை கொண்ட அவரது குடும்பத்தினர் இறை நாட்டம் கொண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மதிப்பில்லாத ஓர் இளைஞனாகவே கருதினர்; ஆனால் அன்னாரின் மறுவுலக ஈடுபாடு அவர்களுடைய தாயாரை மிகவும் கவர்ந்தது.

சிராக் பீபி 1868 –ஆம் ஆண்டு மரணமடைந்தார். காதியானுக்கு மேற்குப் பக்கத்தில் அமைந்த ஷா அப்துல்லாஹ் காஸி என்று அழைக்கப்பட்ட அவர்களது குடும்பக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் தாயாராகிய அவரை மிகவும் நேசித்தார்கள். அவரைப் பற்றிய பேச்சு வரும்பொழுதெல்லாம் அவர்களுடைய கண்களில் நீர் பெருகிவிடும். அவருக்காகப் பிரார்த்திப்பதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவருடைய ஆன்மா என்றென்றும் சாந்தியிலும், சமாதானத்திலும் நிலைத்திருக்கட்டுமாக!

(தொடரும்...)




ரூ. 75/-

'ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு' என்ற நூல் தமிழில் வெளிவந்துள்ளது.

சகோதரர்கள் வாங்கி பயன் பெறுவீர்!

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam